SS Digital's
Printers for all requirements
Type Setting, Colour, Black Photo Copy & Printing, Offset Printing, Photo Printing, Flex Printing, Book Page Making, Digital Imaging, Digital Album Making, Binding, Laminating, Framing
#58, Vidyalayam Road, Trincomalee.
Off: 026 - 22 24933 Mob: 071 - 5415854, 077 - 0773051
ssdigitals.shan@gmail.com
2013ம் ஆண்டுக்கான அனைத்து வகையான நாட்காட்டிகளும் எம்மிடம் தரமாகவும் விரைவாகவும் நியாயவிலையிலும் அச்சிட முடியும்


ஐப்பசி மாதம் 19ம் திகதி November 04, 2012

# மலைமுரசு ®

MALAIMURASU

அறைவு 01 இயம் 15

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்


விலை – 20.00 பக்கங்கள் – 10 பிரதி ஞாயிறு தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# இருளும் உயர் தேசிய திப்புளோமா பட்டதாரிகளின் எதிர்காலம்

(ஸ்ரீ)

## அரச நியமனங்களில் புறக்கணிக்கப்படுவார்களா ?

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நியமனங்களுக்குள் உயர் தேசிய திப்புளோமாப் பட்டதாரிகளை உள்ளடக்குவதைத் தவிர்க்குமாறு அறிவித்தல் வெளியாகி உள்ளது.



Ministry of Higher Education
Sri Lanka
Sri Lanka Institute of
Advanced Technological Education
This is to certify that
at the convocation held in Colombo
on November 16, 2010
having successfully completed the prescribed course of study at the
Advanced Technological Institute,
Trincomalee
was awarded the
Higher National Diploma in
Witness our hands this Sixteenth day of November Two Thousand and Ten
Director (Examination)
SLIATE
Director General
SLIATE

உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்திலிருந்து நான்கு வருடக் கல்விக் காலத்தை நிறைவுசெய்து வெளியேறிய திப்புளோமாப் பட்டதாரிகளிற்கே இந் நிலமை ஏற்பட்டுள்ளது.

4

| புதிய கல்வித் தகைமைகள் | அத்தகைமைகளுக்கு சமப்படுத்தக் கூடிய மற்றைய கல்வித் தகைமைகள் | மேலதிக விபரங்களின் பொருட்டு தொடர்பு கொள்ளல். |
|---|---|---|
| 1. தேசிய பயிலுனர் சபையினால் நடாத்தப்படும் [illegible] தச்சு, [illegible] இணைத்தல், தண்ணீர் குழாய் பொருத்துதல் உருக்கு கம்பி பொருத்துதல் மற்றும் கம்பி வளைத்தல், மோட்டார் வாகன தொழில்நுட்பம் போன்ற துறைகளில் தேசிய தொழிற் பரீட்சையில் 11 வது தரத்தினை சித்தி. | உயர்கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் தொழில் நுட்பக் கல்லூரியினால் குறிப்பிட்டத் துறையில் வழங்கப்பட்ட தேசிய தொழில் சான்றிதழ். | உயர் கல்வி அமைச்சு குறிப்பு இல.கா/அ/5/14/7 |
| 2. உயர்தேசிய டிப்ளோமா பொறியியல் (உ.தே.டி.பொ.) | தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா (தே.தொ.நு.டிப்) | கல்வி உயர்கல்வி அமைச்சு (தொழில்நுட்ப கல்விப் பிரிவு) குறிப்பு இல.டி.எஸ்/13/72(12) |
| 3. இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய நாலாண்டு கணக்கியல் டிப்ளோமா (உதேடி) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட வர்த்தக மாணிப்பட்டம் (சாதாரணச்சித்தி) | கல்வி உயர் கல்வி அமைச்சு (தொழில் நுட்ப கல்விப் பிரிவு) குறிப்பு இல கா.அ/5/14/7 |
| 4. இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் உயர்தேசிய நாலாண்டு கணக்கியல் டிப்ளோமா நெறியின் 2வது வருட சான்றிதழ் (குறிப்பிட்ட பதவிக்கான ஆட்சேர்ப்பு முறையில் கல்வித்தகைமைகளாக வர்த்தகவியல் தொடர்பான அறிவு தேவையென கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம்) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட முதலாவது அல்லது மற்றைய சான்றிதழ். | உயர்கல்வி அமைச்சு, குறிப்பு இல.கா.அ/5/14/7 |
| 5. இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் நாலாண்டு உயர் தேசிய வர்த்தகவியல் சான்றிதழ் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்பட்ட வர்த்தக மாணிப்பட்டம் (சாதாரணச்சித்தி) | உயர் கல்வி அமைச்சு, குறிப்பு இல.கா.அ/5/14/7 |
| 6. இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் நான்கு வருட தேசிய வர்த்தகவியல் டிப்ளோமா பாடநெறியின் இரண்டாம் வருட சான்றிதழ் (பதவியின் பொருட்டு கல்வித் தகைமைகளாக வர்த்தகவியல் அறிவு தேவை [illegible] ஆட்சேர்ப்பு முறையில் கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம்) | அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப கல்லூரியில் இருந்து பெற்றுக்கொண்ட முதலாவது அல்லது இடைநிலை சான்றிதழ் | உயர் கல்வி அமைச்சு குறிப்பு இல.கா.அ/5/14/7 |

சுற்று நிருபம் 46/90

ஜூன் 2012 ல் பயிலுனர் நியமனங் களைப் பட்டதாரிகளுக்கு அரசு வழங்கிய போது வடமாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உயர் தேசிய திப்புளோமா மாணவர்களிற்கும் நியம னங்கள் வழங்கப் பட்டன. சுமார் 43,300 பட்டதாரிகள் இந்நியமனத்தை நாடு முழுவதும் பெற்றுள்ளனர்.

வடமாகாணத்தில் உயர் தேசிய திப்புளோமா மாணவர்களை இந்நியமனத்திற்குள் உள்ளடக்காமற் போனமைக்காக அம் மாணவர்களால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு நியமனங்கள் வழங்கப்பட்ட போது திருக்கோணமலை மாவட்டத்தில் பல்கலைக்கழகப் பட்டதாரிகளை விட அதிகரித்த எண்ணிக்கையில்

(10ம் பக்கம் பார்க்க)

## மழை சொல்லும் செய்திகள்

### மழையால் உடைந்தது மனமும் வீதியும்.



லிங்கநகர் இரண்டாவது வீதியின் முதலாவது ஒழுங்கை மூன்று வாரங்களுக்கு முன் நகர சபையால் கற்கள் பதிக்கப்பட்டு அமைக்கப் பட்ட நிலையில் அண்மையில் பெய்த மழையால் அவ்வீதி ஓரங்கள் சேதமடைந்துள்ளன. குறித்த இவ் ஒழுங்கையில் இன்னும்

(10ம் பக்கம் பார்க்க)

### மழை நீரால் பலர் உறவினர் வீடுகளுள் அடைக்கலம்.

பெய்து வருகின்ற கடும் மழையால் கிருஸ்ணபுரம், கணேஷ்கார்டின் போன்ற பிரதேசங்கள் பெருத்த பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளன. கண்டி வீதியின் புனரமைப்பு பணிகளின் நிமிர்த்தம் வீதி உயர்த்தப் பட்டமையால் குறித்த இரு



(10ம் பக்கம் பார்க்க)

## 18மாதங்களின் பின்னரா பல்கலைக்கழகம்?

2011ம் ஆண்டில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 2013ம் ஆண்டின் ஆரம்பக் காலாண்டிலேயே பல்கலைக் கழகத்திற்குள் பிரவேசிக்கவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(10ம் பக்கம் பார்க்க)

## களைகட்டியது சாக்கு விற்பனை : வெறிச்சோடியது மீன் சந்தை



கடும் மழை பெய்து வரும் திருக்கோணமலையில் திடீரெனப் புது வியாபாரம் ஒன்று வசூலை அள்ளி வருகின்றது.

தெருத்தெருவாக சாக்கினைக் கூவி விற்கும் செயற்பாடுகளில் பலர் ஈடுபட்டிருந்தனர். அதற்கும் மேல் சென்ற வியாபாரிகள் இருவர் முச்சக்கர வண்டியில் சாக்கினை விற்கத் தொடங்கியதை காணக்கூடியதாக இருந்தது.

(10ம் பக்கம் பார்க்க)

## கழிவு நீர் கடலை அடையவில்லை



திருக்கோணமலையின் கடற்கரையில் காணப்படுகின்ற கழிவு நீரை கடலுக்குள் அனுப்பும் வடிகாலின் வாயிலில் கழிவு நீர் தேங்கி நிற்பதால் கடற்கரைக்கு வரும் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ் வடிகான் மூலம் கடலை

(10ம் பக்கம் பார்க்க)

## வாக்குறுதிகளை அடித்துச் சென்ற மழை நீர்





வருடாவருடம் மழையால் கண்டி விதியில் அமைந்துள்ள கிருஸ்ணபுரம் பிரதேசம் வெள்ளத்துள் சிக்குண்டு தவிப்பது வழக்கமாகியுள்ளது. மட்டிக்களி என்று அழைக்கப் படுகின்ற பகுதியில் கிருஸ்ணபுரம், சுமேதகம, ராஜவ

(10ம் பக்கம் பார்க்க)

## தாக்கப்பட்டனர் தமிழ் மாணவர்கள்

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருக்கோணமலை வளாகத்தின் இரண்டாம் வருடத் தமிழ் மாணவர் ஒருவர் இறுதியாண்டு மாணவர்களால் தாக்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னணியில் இவ்விடயம் வெளியாகியுள்ளது.

கடந்த 18ம் திகதி இரவு மாணவர் விடுதியில் தனித்திருந்த இத் தமிழ் மாணவர் சிரேஸ்ட மாணவர்களின் தாக்குதலுக்கு உள்ளாகித் திருமலைப் பொது வைத்திய சாலையில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டு 20ம் திகதியளவில் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து இவ்விடயம் காவல்த்துறையிடம் விசாரணைகளுக்காக கையளிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 6ம் திகதி வைத்தியசாலையிலிருந்து பெற்றுக்கொள்ளப்

(10ம் பக்கம் பார்க்க)

## தூய யூதாததேயு ஆலய திருவிழா

(ரொஸான்)

திருக்கோணமலை இலிங்கநகர் பிரதேசத்தில் அமைந்திருக்கும் தூய யூதாததேயு ஆலய வருடாந்த திருவிழா ஆனது 2012.10.19 அன்று கொடியேற்றத் துடன் ஆரம்பமாகியது. இவ் ஆலய திருவிழாவின் வழிபாடுகள் தினமும் மாலை

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

கல்வி முறைகளின் உலக மாற்றம் பற்றிய சிந்தனை நிச்சயமாக எமக்குத் தேவைப்படுகின்றது. நாம் எல்லோருமே இன்னும் எமக்குத் தெரிந்த அல்லது பிடித்தமான வழியினூடகவே எமது கல்வியை முன்னோக்கி நகர்த்தத் தலைப்படுகின்றோம். ஆனால் கல்வி முறை பெரும் மாற்றங்களுக்குட்பட்டு விட்டதை நாம் அறியாதிருக்கின்றோம் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

என்று பொருளாதார அச்சில் உலகம் சுழலத் தொடங்கியதோ அன்றே கல்வி "அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கானதே" என்னும் தனது பிரதான இலக்கிலிருந்து விலகி, கல்வி பொருளாதார வளத்தைப் பெருக்கிக் கொள்வதற்கானது எனும் துணை நோக்கத்தைப் பிரதானமாகக் கொள்ள முனைந்து விட்டது. இதே கருத்தைத்தான் வரலாற்றாய்வாளரும் இலங்கையில் பல பல்கலைக்கழகங்களின் வரலாற்றுத்துறைத் தலைவராகப் பணியாற்றி தற்போது வேறு நாடொன்றில் வாழும் பேராசிரியர் கலாநிதி முருகர் குணசிங்கம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "தமிழ் மக்கள் தமது பொருளாதார வளத்தைப் பெருக்கிக் கொள்ளும் கல்வி முறைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்தனர். தமிழர் தொடர்பான வரலாற்று ஆய்விற்கான முக்கியத்துவம் அங்கு குறைந்து போனது" என்றார். அதன் பால் பொறியியல், வைத்தியம், கணக்கியல் என்னும் படிநிலைப் போக்கையே நாங்கள் எமது தெரிவாகக் கொண்டுள்ளோம்.

ஆனால் தற்காலத்தில் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் கல்வி முறைகள் பல நாட்டிற்குள் வந்துவிட்டன. மிகக் குறுகிய காலத்தினுள் பகுதி நேரமாக அக் கல்விமுறையைப் பின்பற்றும் வாய்ப்பை அவை வழங்குகின்றன. அதனை நாம் அறியாதிருக்கின்றோம் என்பதே எமது மிகப் பெரும் குறைபாடாக உள்ளது.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசிற் பரீட்சைக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை நாம் உயர்கல்வி முறைகளை அறிந்து எமது செல்லக் குழந்தைகளுக்கு வழங்கும் வாய்ப்பைப் பற்றி சிந்திப்பதில்லை. தற்போதும் நாம் சாதாரண தரத்தின் பின் உயர்தரம். அதன் பின் பல்கலைக்கழகம், அதன் பின் பட்டதாரியாகி வேலை வாயப்பைத் தேடல் அல்லது அரச வேலைகளுக்காக ஆர்ப்பாட்டம் செய்தல் என்ற தொடர் பொறிமுறைச் சிந்தனையில் சிறிதேனும் மாற்றமின்றி எமது கல்விப் பயணத்தைத் தொடர்கின்றோம். ஏன்? உண்மையை உணர மறக்கின்றோம். 2012ம் ஆண்டின் ஆரம்பத்தில் அறுபதாயிரம் பட்டதாரிகளுக்கும் மேல் வேலைவாய்ப்பற்றிருந்ததைப் புள்ளி விபரங்கள் வெளிக்காட்டுகின்றன.

ஆனால் அனைத்துப் பத்திரகைகளிலும் ஒவ்வொரு ஞாயிறு பதிப்புக்களிலும் பெரும் எண்ணிக்கையில் வேலைவாய்ப்பு விளம்பரங்கள் வெளியாகின்ற போதும் ஏன் அந்த அறுபதாயிரம் பட்டதாரிகள் வேலைவாய்ப்பின்றி இருக்கின்றார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மிகப்பிரதான காரணம் யாதெனில் தொழிற்சந்தையின் தேவைக்கேற்ற பட்டங்களையோ படிப்புக்களையோ அவர்கள் கொண்டிருக்கவில்லை என்பதே அதன் காரணம் ஆகும்.

பகுதி நேரப் படிப்புக்கள் பெருமளவில் உள்ளன. 16 வயதடைந்த எவரும் எவ்வித அடிப்படைத் தகுதிகளுமின்றி தொழிற் கல்வி நடவடிக்கைகளைத் தொடங்கக் கூடயவாறு இலங்கையில் கல்வி முறையில் மாற்றம் நிகழ்ந்து விட்டது.

தனியார் பல்கலைக்கழகங்களிற் பெரும்பாலானவையை இலங்கையின் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அங்கீகரித்துள்ளது. ஆங்கிலம் அடிப்படைத் தகைமையாக மாறியுள்ளது. சிறிதளவேனும் பேசவும் எழுதவும் ஆங்கிலம் தெரிந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

எனவே நாம் அனைவரும் இம் மாற்றங்களை உணர்ந்துகொள்ளத் தலைப்படுவோமா? மாற்றங்களை உணராத போது மரணித்த மனிதராய் போய்விடுவோம் நாம்.... உயிரிருந்தாலும்.....

-ஆசிரியர்-

# கோணலிங்க மகா வித்தியாலயத்தில் இலங்கை வங்கிக் கிளை ஆரம்பம்



இலங்கை வங்கியின் பாடசாலைக் கிளையொன்று லிங்கநகர் ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டது.

01.11.2012 வியாழக்கிழமை இடம்பெற்ற இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளர் ஜனாப் அப்துல்லா, பிரதான கிளை முகாமையாளர் ஸ்வாமிநாதசர்மா மற்றும் பிராந்திய உதவி முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்தோடு அதிபர் திரு.க. யோகானந்தனின் கீழ் பதினொரு பேர் கொண்ட மாணவர்குழு ஒன்று பாடசாலைக் கிளையின் பாடசாலை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் பாடசாலைக்கும். மாணவர்களுக்கும் இலங்கை வங்கியின் சார்பில் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

## புல்வேளாண்மை தினம்




கிழக்கு மாகாண விவசாய கால்நடை கிராமிய அபிவிருத்தி அமைச்சு அக்டோபர் முத்பதாம் திகதியை 30.10.2012 புல்வேளாண்மை ஊக்குவிப்பு தினமாக பிரகடனம் செய்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பால உற்ப்தியையும். பசும்பால் நுகர்வினையும் அதிகரிக்கும் பொருட்டு இத்திட்டம் முன்வைக்கப்பட்டது. இதனை ஊக்குவிக்கும் முகமாக 11இலட்சம் புல் துண்டங்கள் விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உயர்ரக புல் இனங்களின் உற்பத்தியை எதிர்காலத்தில் பெருக்குவதற்கும் அமைச்சு நடவடிக்கை எடுதது வருகின்றது. இத்திட்டத்தின் ஆரம்ப வைபவம் செவ்வாய்க்கிழமை 30.10.2012 திருகோணமலையில் உள்ள கால்நடை அபிவிருத்தி பயிற்சி திணைக்களத்தில் காலை 10 மணியளவில் நடைபெற்றது. கிழக்கு மாகாண விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எஸ்.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை பிரதம அதிதியாக கலந்து கொண்டு புல் வேளாண்மைத் தினத்தை அங்குராப்பணம் செய்து வைத்தார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள நாற்பத்தைந்து கால்நடை வைத்திய அலுவலகங்கள் ஊடாக புற் துண்டங்கள் விநியோகம் செய்யப்படவுள்ளது.

சிறந்த புல் வளர்ப்பாளர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதுடன் கால்நடை அபிவிருத்தித் திட்டங்களுக்கு நன்கொடைகளும் வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அபயகுணவத்தனவும் கலந்து சிறப்பித்தார்.

## கந்தளாய் குளம் இராணுவ கட்டுப்பாட்டில்



கந்தளாய் குளத்தில் இரத்தினக்கல் வளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதை அடுத்து அப்பகுதி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

கந்தளாய் குளத்தில் பலர் தற்போதும் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபடுவதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் நிமல் பண்டார தெரிவித்தார்.

அதனால் குறித்த பகுதிக்கு அதிக பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். கந்தளாய் குளம் இராணுவ கட்டுப்பாட்டில்

கந்தளாய் குளத்தில் இரத்தினக்கல் வளம் கண்டுபிடிக்கப்

(10ம் பக்கம் பார்க்க)

## குடை சாய்ந்தது டிப்பர் லொறி



கடும் மழை பெய்த போது திருக்கோணமலை வவுனியா வீதியில் சிறு கற்கள் ஏற்றி வந்த லொறியொன்று தெருவிலிருந்து விலகி குடைசாய்ந்தது. 27.10.2012 சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. அதிஸ்டவசமாக எதிரே வந்த பயணிகள் பேரூந்து விபத்தடையாமல் தப்பியது. லொறிச் சாரதி மலைமுரசிற்குத் தெரிவிக்கையில் கடும் மழை பெய்து கொண்டிருந்த படியால் தெருவின் அந்தங்களைச் சரியாகக் கணிக்க முடியவில்லை என்றும் எதிரே வந்த பேரூந்தைக் கண்டவுடன்

(10ம் பக்கம் பார்க்க)

# பஸ் விபத்தில் 40 பேர் காயம்

கெப்பித்திகொல்லாவ, பதவியா வீதியின் தம்மன்னாவ பகுதியில் பஸ்ஸொன்று குடை சாய்ந்ததில் சுமார் 40 பேர் காயமடைந்துள்ளனர்.

வேகத்தை கட்டுப்படுத்த முடியாது போனதால் குறித்த பஸ் இன்று முற்பகல் விபத்துக்குள்ளானதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

யாத்திரிகர்களை ஏற்றிச்சென்ற பஸ்ஸொன்றே இவ்வாறு விபத்துக் குள்ளா கியுள்ளது.

### மூதூர் தாழ்நிலக் குடியிருப்புகள் வெள்ளத்தில் மூழ்கின

மூதூர் பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் தாழ்நிலக் குடியிருப்புக்கள் வெள்ளத்தில் மூழ்கி வருகின்றன.

கடல் கொந்தளிப்பினாலும் மூதூர் கரையோரக் கிராமங்கள் சிலவற்றில் கடல் நீர் உட்புகுந்துள்ளது. தொடர் மழையினால் சுமார் 12 ஆயிரத்திற்கு மேற்பட்ட நெல் வயல்கள் நீரில் முற்றாக மூழ்கியுள்ளன.

கடற்றொழிலாளர்கள், கூலித் தொழிலாளர்கள் முதலானோர் இச்சீரற்ற கால நிலையினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## தபால் நிலைய வீதியல் பெரு வெள்ளம்



எப்பொது மழை பெய்தாலும் வெள்ளம் தேங்கும் ஓரிடமாக தபால் நிலைய வீதியும் நீதிமன்றவீதியும் சந்திக்கும் தெற்கு அந்தம் காணப்படுகின்றது. இத் தெற்கு அந்தத்தில் தபால்நிலையம் மற்றும் ஏனைய முக்கியமான வர்த்தக நிலையங்களும் காணப்படுகின்றன.

பல வருடங்களாக இந் நிலை நீடிப்பதாகவும் உரிய உள்ளூர் நிறுவனங்கள் அசண்டையீனமாக இருப்பதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்தனர். மேலும் மலைஅருவிக் கட்டடத்திற்கு முன்பாகவுள்ள காண்கள் அடைத்திருப்பதால் மழை நாட்களில் வெள்ளம் தபால் நிலைய வீதியை மேவிப்பாய்வதையும் காணக் கூடியதாக இருக்கின்றது.

## மாணவர்களின் எண்ணிக்கையை விஞ்சியது ஆசிரியர்களின் எண்ணிக்கை.

30.10.2012 ல் திருக்கோணமலைப் பாடசாலைகளின் பெரும்பாலானவற்றில் மாணவர்களின் எண்ணிக்கையை விட ஆசிரியர்களின் எண்ணிக்கையே அதிகரித்திருந்தாக ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். மூன்று நாட்கள் விடுமுறையைத் தொடர்ந்து பாடசாலைகள் திறக்கப்பட்ட அன்றும் கடும் மழை பெய்ததுடன் சூறாவளி எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டிருந்ததால் பாடசாலைக்கு வந்த மாணவர்களின் எண்ணிக்கை அருகிவிட்டிருந்தது. அப்படியும் சில மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தந்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்ட பரம்பரை...

-நந்தினி சேவியர்-

விருப்புடன்தான் நான் கம்யூனிஸ்ட் வாலிப சங்க உறுப்பினன் ஆகினான். தோழர்கள், எஸ்.எப். போஜியா சிவகுருநாதன், கணேசன் மாஸ்ரர், சி.கணேசன் காத்தலிங்கம், அருட் செல்வம், சைவம், சிவபாதம் நவரெத்தினம், செல்லையா என ஒரு இளைஞர் குழாம் எமது வாலிப சங்க உறுப்பினர்கள். நவரத்தினம் அடிக்கடி யாழ் போய்வருவார். அவர் யாழ் மாநகரசபை நூலகத்தில் ஒரு அங்கத்தவர். அவர் இரவல் வாங்கும் புத்தகத்தை இரவல் வாங்கிப் படிக்கும் ஒரு வாசகனானேன். செ.கணேச லிங்கனின் 'செல்வானம்' நாவலை அவர் மூலம் வாங்கி வாசித்தேன். இளங்கீரனின் 'நீதியே நீகேள்' நாவலையும் நான் வாசித்தது நவத்தின் மூலம்தான். க.பொ.த வகுப்பு இறுதி நாட்கள் அல்வாய் வாலிப சங்க மாநாட்டுக்கென ஒழுங்குகள். 'தொழிலாளி' பத்திரிகையில் அது விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. தொழிலாளி வார பத்திரிகை ஆசிரியர் இளங்கீரன் மாநாட்டில் சிறப்புரையாற்ற அழைக்கப்பட்டிருந்தார். திகதி நிர்ணயிக்கப்படவில்லை. நான் சுதந்திரனின் முன்னுரிமை எழுத்தாளன். நந்தினி எனும் பெயரில் 'சூழ்லாம்பு' எனும் கதையை எழுதினேன். அடுத்தவாரம் பிரசுரமாகியது. சக நண்பர்கள் என்னை அவதானிக்கத் தொடங்கினர். நாவல் எழுதும் எண்ணம் என்னில் துளிர் விடத்தொடங்கியது. 'மேகங்கள்' எனும் பெயரில் நாவல் ஒன்றை எழுத ஆரம்பித்தேன். எழுதுவதற்கு தாள் கிடைப்பதில்லை. அதற்கான பொருளாதார வளமும் இல்லை. எங்களின் ஊர் கிராமசபை அங்கத்தவர் க.சி. மாணிக்கம் இவர் ஒரு ரஸ்ய சார்பு கொம்யூனிஸ்ட், இவரது வீடு திடீரென தீப்பிடித்து விட்டது. அணைக்க முடியாமல் கருகிப் போன அந்த வீட்டில் அரைகுறையாக எரிந்த நிலையில் பல புத்தகங்களும், துண்டுப்பிரசுரங்களும், கடிதத்தலைப் புகளும் குப்பைபோல் குவிந்து கிடந்தன. அவற்றில் நான் எடுக்கக் கூடியவற்றை எடுத்துக் கொண்டேன். சில 'தாமரை' இதழ்கள் கிடைத்தன. கே.டானியலின் தண்ணீர், கொடும்பாவி கதைகளை நான் அவற்றில் பார்த்தேன். டானியல் கதைகள் தொகுப்பில் ஏலவே அந்தக் கதைகளைப் பார்த்த எனக்கு இந்திய சஞ்சிகையில் அக்கதைகளைப் பார்த்து ஒருவித சந்தோசம் ஏற்பட்டது. நம்மவருக்கு இந்திய சஞ்சிகையிலும் இடமிருப்பது குறித்து நான் சந்தோசப்பட்டேன். டானியல் மீதான பிரியம் அதிகரித்தது. சின்னத்தம்பி அண்ணர் இப்போது எனதும் கட்சித் தோழர். நான் நாவலைத் தொடர்ந்து எழுதத் தொடங்கினேன். எரிந்துபோன துண்டுப்பிரசுரங்கள், கடிதத்தலைப்புகளின் பின்பக்கம் என் எழுத்துக்களால் நிறைந்தது. 57 அத்தியாயங்கள் மண்வாசனையுடன் கூடிய எழுத்துமுறை, முற்போக்கு, நற்போக்கு, பிற்போக்கு எதுவும் தெரியாத 19வயது இளைஞன். க.பொ.த பரீட்சையில் 5C, 3S உடன் சித்தியடைந்த ஒரு சாதாரணன். கிளரிக்கல் சோதனை எழுதும் தகுதியுடையவன். பல்கலைக்கழக புகுமுகவகுப்பில் எந்தத்துறைக்குப் போவதெனத் தெரியாத சங்கட நிலை. மற்ஸ் இல்லை- சவரிமுத்து மாஸ்ரரினால், எண்கணிதம் எடுத்தவன். எனவே திரிசங்கு சொர்க்க நிலை, உயர்கல்விக்கான வாய்ப்புக் கிட்டவில்லை. அரசாங்க எழுதுவினைஞர் சேவைக்கு (கிளறிக்கல்) விண்ணப்பித்தேன். சோதனையும் எழுதிமுடித்தேன்.

நாவலடியிலிருந்து அல்வாயை ஊடறுத்துச் செல்லும் செம்மண் பாதை குறுக்கட்டுப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மித்ததாக ஒரு சலூன்... இந்தச் சலூனில் நான் மார்க்சிசத்தின் அரிச்சுவடியை கற்கத் துவங்கினேன். கேலியும் கிண்டலும் சிரிப்பும்.... விமர்சனமும் நிறைந்த இனிய நாட்கள். தோழர்கள் என்னை நட்போடு கிண்டலடிப்பார்கள் 'பாரம்' சிறுகதைத் தொகுதி இன்னும் சில நாட்களில் வெளிவர இருப்பதாக அந்தக் கிண்டல் அமையும்.

அல்வாய் வாலிப சங்க (கம்யூனிஸ்) மாநாடு குச்சம் பௌத்த பாடசாலையில் (கிடுகு கொட்டில்) நடைபெற இருந்தது. காலையில் பேராளர் மாநாடு முடிந்து மாலை அமர்வுக்கு நான் தலைமை தாங்கினேன். தோழர்கள் இளங்கீரன், வி.ஏ.கந்தசாமி, எம்.ஏ.சி.இக்பால், எஸ்.சிவதாசன், கரவை கந்தசாமி, கே.செந்திவேல், எஸ்.அருளானந்தம், ஆகியோர் முக்கிய பேச்சாளர்கள், மாநாடு இனிதே முடிவடைந்தது.

சங்கானையில் சாதிக்கலவரம் மூண்டது. வடபகுதி எங்கும் ஆங்காங்கே போராட்டங்கள். சாதிக்கான சங்கங்கள் கூடாது என தீர்மானித்து 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்' உருவாகிய காலம். 'சாதி அமைப்புத் தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்' எனும் கோசத்துடன் சுன்னாகத்திலி ருந்து ஒரு பெரும் ஊர்வலம் யாழ் நகர் நோக்கிப் புறப்பட்டது. இது நடந்தது 1966 அக்டோபர் 21ம் திகதி அதனைத் தடுக்க பலவித முயற்சிகள் நடந்தது. ஆயினும் ஊர்வலம் திட்டமிட்டபடி நடந்தது. பொலிசாரின் கெடுபிடியையும் மீறி எஸ்.ரி.என். நாகரத்தினம் தலைமயில் தீ.ஒ.வெகுஜன இயக்கத்தை எங்களது கட்சி உருவாக்கியது. அடிக்கு அடி, இரத்தத்திற்கு இரத்தம் என்ற நிலைப்பாட்டை சண்முகதாசன் மேடை தோறும் பிரகடனப்படுத்தினார். மாவிட்டபுரம் ஆலயப்பிவேசப் போராட்டம், பன்றித் தலைச்சி அம்மன் கோவில் போராட்டம், சங்கானை (நிச்சாமம்) மட்டுவில், மந்துவில், கன்பொல்லை என போராட்டத் தீ ஜுவாலை விட்டெரியத் தொடங்கியது. ஒடுக்கப்பட்ட மக்களில் பலர் வீரத்தியாகிகள் ஆகினார்.

மேதின ஊர்வலங்கள் வடபகுதியில் பிரமாண்டமான முறையில் எமது கட்சியினால் நடாத்தப்பட்டன. ஒரு உண்மையை இங்கே கூறி வைக்கிறேன். தோழர் சண்முகதாசன் இலங்கை இடதுசாரி இயக்கத்தலைவர்களால் குறிப்பிடப்பட வேண்டியவர்.

சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் அங்கம் வகிக்கும் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக தோழர் சண். இருந்தார் இன்றுவரை அத்தகைய நிலை ஒரு தமிழருக்கு சாத்தியமாகவில்லை. இதனால் திரிபுவாதிகள் (ரஸ்ய சார்பு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள்) தோழர் சண்ணை இனத்துவேசத்துடன் நாகலிங்கம் சண்முகதாசன் என பேசுமளவுக்கு குரோதம் வளர்ந்தது.

யாழ் நகர மண்டபத்தில் அடிக்கடி சண்ணின் பகிரங்கச் சொற்பொழிவுகள் இடம்பெறும் இதற்கென விளம்பர போஸ்டர்களை வடபகுதியில் எமது கட்சியும் வாலிப சங்க உறுப்பினர்களும் ஒட்டுவோம்.

**மிகுதி அடுத்த வாரம் தொடரும்**


# கடல் தின்ற நம் நிலம் -3

**கா .செந்தூரன்**

கடந்தவாரம் குமரியில் இருந்தநாடுகள், நகரங்கள், ஆறுகள், மற்றும் மலைகளை பற்றி தெரிந்து கொண்டோம்.

அப்படி இருந்த நம் குமரிக்கண்டதிற்கு என்ன நடந்தது? பரந்துவிரிந்த பாரிய நிலப்பரப்பு ஒரே இரவில் கடலுக்குள் சென்றுவிட்டதா? இந்த பிரபஞ்சத்தில் உள்ள எல்லா பொருட்களில் உருவாக்கங்களும் கேள்விக்கு உரியவைதான். அப்படியான ஒன்று தான் நம் பூமியும். இது உருவாகிய காலத்தில் இருந்து ஏதோ ஒரு மாற்றத்தை உள்வாங்கி கொண்டுதான் வந்திருக் கிறது. இந்த மாற்றங்களுக்குரிய காரணத்தை சரியாக வரையறை செய்ய இக்கால விஞ்ஞானத்தால் கூட முடியவில்லை. ஏதோ ஒரு சக்தி நம் பூமியை ஆட்டிப்படைக்க நம் பூமியும் அதன் சொல்படி நடந்து கொண்டு இருக்கிறது.

குமரியைஎப்படி கடல் தின்றது?




குமரிக்கண்டம் கண்ட அழிவு குறிப்பிட்ட ஒரு நாளிலோ அல்லது ஒரு நேரத்திலோ இடம்பெறவில்லை. அது கட்டம் கட்டமாக பல்லாயிரம் ஆண்டுகள் தொடர்ந்து நிகழ்ந்த பூமியின் காலநிலை மற்றும் பௌதிக மாற்றங்களால் நிகழ்திருக்கிறது.

எந்த நிகழ்வு முதலில் ஏற்பட்டது என்பதை கூற முடியா விட்டாலும் விட்டாலும்.. காரணங்களை என்ன வென்று புவியியல் மற்றும் அறிவியா லார்கள் கருத்தின் அடிப்படையில் கூறமுடியும்..

உலகத்தில் வாழும் உயிரினங்கள் மற்றும் பஞ்சபூதத்தின் அங்கங்கள் எல்லாம் சக்திமயத்தால் முறையே ஓர் ஒழுக்க நியதியைப் பின்பற்றி இயங்கினாலும், அவற்றின் இயக்கத்திலும் வடிவத்திலும் தொடர்ந்து மாறுபாடுகள் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

அப்படி குமரிக்கண்டம் அழிய தொடங்கிய காலப்பகுதியான கி.மு. 17000 - 10000 காலப்பகுதியில் இருந்து பல பாரிய புவியியல் மாற்றங்களை இந்த உலகம் காணத்தொடங்கிவிட்டது. இன் நாட்களில் குமரியில் மட்டும் அல்ல உலகின் பல பகுதிகளில் மாறுதல்கள் ஏற்பட தொடக்கிவிட்டது




அவ்வாறு குமரிக்கண்டம் அழிவதற்கு என்ன காரணங்கள் இருந்திருக்க முடியும் வாருங்கள் பயணிப்போம் குமரியின் அழிவு நாட்களை நோக்கி ...


நான் குறிப்பிட போகும் காரணங்கள் அனைத்தும் இதுவரை புவியியல் ஆராய்ச்சியாளர்களால் நிருபிக்கபட்டவை.

பல மூலக்கூறுகளில் இணைவு தான் நாம் வாழும் பூமி. அதிலும் பூமியில் உள்ள கடல்களும் நிலப்பரப்புக்களும் பல முலக்கூறுகளை கொண்ட புவித்தட்டுக்கள் மேல்தான் உள்ளன. இப் புவிதட்டுக்கள் இணைந்தவை அல்ல இவை அனைத்துக்கும் இடையில் சிறிய இடைவெளி காணப்படும். அதுமட்டும் அல்லாது இவ் இடைவெளிகளுக்கு இடையில் சிறிய அசைவு காணப்படும். அவ் சிறிய அசைவு, பாரிய அசைவாக உருவாகும் போது நிலநடுக்கமாகவோ அந்த நிலநடுக்கம் ஆழிப்பேரலை யாகவோ உருவாகும். இது நாம் எல்லோரும் அறிந்தவிடயம்.

குமரிக்கண்டம் இருந்த பகுதியில் நான்கு புவித்தட்டுகளின் இணைவுகள் காணப்படுகின்றன.

இப்பகுதியில் நிலநடுக்கம் உண்டாக்குவதற்கு சாத்தியங்கள் மிகமிக அதிகம். :

அவ்வாறன புவித்தட்டு பாரிய அசைவுகள் தொடர்ந்து இடம்பெறும்



போது இரண்டு இயற்கை அழிவுகளை ஏற்படுத்தி இருக்கலாம்.

முதலாவதாக பாரிய நிலத்தட்டு அசைவால் ஏற்படும் நிலநடுக்கம் மிகப்பெரிய ஆழிப் பேரலையை உண்டாக்கி இருக்கலாம்.

இரண்டாவது காரணம் நிலத்தட்டுக்கள் அசைவு காரணமாக பாரிய நிலப்பிரிவு ஏற்றபட்டு கடல் நீர் உட்புகுந்திருக்கலாம். அதுமட்டும் அல்லாது அறிவியாலார்கள் இன்னும் ஒரு காரணத்தை சொல்லுகின்றனர் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த பனியுகத்திற்கு பின் வெப்பம் மிகையான காலத்தில் பனிப் பாறைகள் உருகி கடல் மட்டம் மெதுவாக படிப்படியாக உயர்ந்து நில நடுக்கத்தால் உண்டான பிளவுகளுக்குள் கடல் உட்புகுந்து குமரிக் கண்டம் மூழ்கிப் போயிருக்கலாம்.

இவ்வாறன இயற்கைஅழிவுகள் மற்றும் நம் அறிவுக்கு எட்டாத பல நிகழ்வுகள் பல தடைவகள் ஏற்பட்டதால் குமரிக்கண்டம் கொஞ்சம் கொஞ்சமாக கடலுக்குள் சென்றிருக்கிறது.

அறிவியல் அடிப்படையில் குமரி அழிவு பற்றி நாம் ஆராய்ந்தாலும் குமரிக்கண்ட அழிவிற்கு பிறகு எழுந்த தமிழ் இலக்கியங்கள் குமரியின் அழிவை எடுத்துரைக்கின்றன. என்ன கூறுகின்றன நம் இலக்கியங்கள் ...

**...அடுத்தவாரமும் ... இன்னும் நடுவோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் photoshop Download செய்து வீட்டீர்கள் என வைத்து கொள்வோம் அமெரிக்காவில் உள்ள இன்னொருவர் அதே கோப்பை Download செய்ய முயலும் போது உங்கள் கணிணியில் இருந்தும் அவருக்கு கோப்புகளின் பகுதி செல்லும். பாதுகாப்பு பற்றி துளியளவு சந்தேகத்துக்கும் இங்கு இடமில்லை. இதற்கு Peer To Peer network என பெயர். இதனால் GB கணக்கான fileகளை கூட சில நிமிடங்களில் தரவிறக்க சாத்தியமாகிறது.

அண்மையில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட SOFA, FIFA என்ற சட்டத்தால் Megaupload என்ற முக்கிய Download தளம் முடக்கிய போது இந்த Torrent சாம்ராச்சியம் அசையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எது எது தேவையோ அதையெல்லாம் தரவிறக்கலாம் இந்த torrent சாம்ராச்சியம் தகவல் தொழில்நுட்ப உலகின் ஒரு புதையல் கிடங்கு என்றே சொல்லவேண்டும்.

முயன்று பாருங்கள் நீங்களும்

# டொரன்ஸ் என்னும் தகவல் தொழில்நுட்பப் புதையல்

தர்சாந்

நீங்கள் சுயநலவாதி என்றால் அல்லது உங்கள் இணைய இணைப்பு வேகம் குறைவு என்றால் உங்கள் கணிணியில் இருந்து கோப்புகள் இன்னொருவருக்கு கோப்புகள் செல்லுவதை தடுத்து வைக்கமுடியும்.

எவற்றையெல்லாம் தரவிறக்கமுடியும்.


புதிதாய் வந்த திரைபடங்கள், பாடல்கள்

கட்டண மென்பொருள்களை இலவசமாகவே

மின்நூல்கள் (PDF Files)

கணிணி விளையாட்டுகள்


"நேற்று கண்டவை கூட, இன்று பழைதாய் மாறிபோகும் இணைய யுகம் இது"



# மகளீர் முரசு

## உருளைக்கிழங்கு இனிப்பு





**தேவையான பொருட்கள்**

உருளைக்கிழங்கு - 500 கிராம், சீனி - 500 கிராம், நெய் - 2 மே.கரண்டி, முந்திரிப்பருப்பு - 25 கிராம், வனிலா - 2 தே.கரண்டி, தண்ணீர் - அரை கப்

**செய்முறை** - கிழங்கை அவித்து உராய் கருவியில் (Scraper) உரஞ்சிக் கொள்ளவும். முந்திரிப்பருப்பை நெய்யில் பொரித்து தனியாக எடுத்து வைக்கவும். பின் சீனியை பாகுகாச்சிக் கம்பிப்பாக வரும் போது கிழங்குத் துருவலைச் சேர்த்துக் கொள்ளவும். அக்கலவை இறுகும் பருவத்தில் நெய்யிற் பொரித்த முந்திரிப்பருப்பு, நெய், வனிலா இவற்றுடன் விரும்பினால் கலரிங் சேர்த்துக் கொள்ளவும். திரளும் பருவத்தில் இறக்கி நெய் பூசிய தட்டில் கொட்டி அழுத்திப் பரவவும். உருளைக்கிழங்கு இனிப்பு தயாராகிவிட்டது. சிறு துண்டுகளாக்கி பரிமாறலாம்.

வற்றாளை, மரவள்ளிக்கிழங்குகளிலும் இதே முறையைப் பின்பற்றலாம்.




14.10.2012 அன்று குணா கல்வி நிலைய 5ம் தர புலமைப் பரிசிலில் சித்தியடைந்தவர்களுக்கான பாராட்டு வைபவத்தின் போது எடுக்கப்பட்டவை



புனித ஜோன் அம்பியுலன்ஸ் படையணியின் தேசிய கடெட் பாசறை வெள்ளிக்கிழமை 26.10.2012 நிலாவெளி தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்டவை



புனித சூசையப்பர் கல்லூரியில் 10 வருடங்கள் அதிபராக சேவையாற்றி அண்மையில் கல்வி சேவையில் இருந்து ஓய்வு பெற்ற வணக்கத்திற்குரிய ஜவனதாஸ் பெர்ணாண்டோவுக்கான பாராட்டு விழா 31.10.2012 அன்று நடைபெற்றபோது எடுக்கப்பட்டவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரசின்
# உலக வலம்

## பென்டகன் மீது அல் கொய்தாப் பாணியில் தாக்குதல் முயற்சி



அமெரிக்க படைத்துறை, உட்துறை நிர்வாகச் செயலக மான பென்டகண் மீது " பின் லேடன்'' முறைத் தாக்கத லுக்குத் திட்டமிட்டதாக குற்றஞ் சாட்டப்பட்ட இளைஞனுக்கு 17 ஆண்டுகள் சிறையுத்தரவை அமெரிக்க நீதிமன்றம் வழங்கி யுள்ளது. விமானமொன்றில் வெடி மருந்துகளை நிரப்பி அமெரிக்க தலைநகரான வோஸிங்டன் மீதும் பெண்டகன் மிதும் லேடன் தாக்குதல் முறையை முயற்சித்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. ரிஸ்வான் பேர்டாஸ் எனும் அமெரிக்க முஸ்லிம் மீதான இத் தீர்ப்பில் அடுத்த 10 வருடங்களுக்கு அவர் நன்னடத்தையில் வெளியே வராதபடியும், அப் பத்து வருடங்களும் தொடர் கண்காணிப்பில் இருக்குமாறும் வரையப்பட்டுள்ளது.

## மலேசியாவை நோக்கிப் பயணித்தவர்களைக் காவுகொண்டது கடல்




பங்களாதேசிலிருந்து கள்ளமாகப் படகேறி மலேசியா நோக்கிப் பயணம் செய்தவர்களில் 130 பேர் படகு மூழ்கிப் பலியானதாக பங்களாதேஸ் கடலோரப் பாதுகாப்புப் பிரிவுத் தளபதி லெப்.கேணல் சாஹிட் ஹசன் தெரிவித்துள்ளார். ஆறு பயணிகளை மட்டுமே உயிருடன் மீட்க முடிந்ததாக அவர் தெரிவித்தார்.

## பாட்டிக்கு இரட்டை குழந்தைகள்

பிரேசில் நாட்டின் சாவ்பாவ்லோ என்ற இடத்தை சேர்ந்தவர் 61 வயது அன்டோனியா ஆஸ்ட்டி. இவரது கணவர் ஜோஸ். இவருக்கு வயது 55. இந்தத் தம்பதியர் திருமணமாகி கடந்த 30 ஆண்டுகளாக ஒரு குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று போராடினார்கள். இவர்களுக்கு இயற்கையாக குழந்தைப் பேறு வாய்க்கவே இல்லை. இந்நிலையில் செயற்கை முறையில் 10 ஆண்டு களுக்கு முன் உறைய வைக்கப்பட்ட விந்தணுக்கள், சினை முட்டையை இணைத்து டாக்டர்கள் செயற்கை முறையில் கருத்தரிக்க செய்து, அதை ஆஸ்ட்டியின் கருப்பையில் வைத்தனர். இப்போது பிரசவித்துள்ள ஆஸ்டி, ஒரு ஆண் குழந்தையையும், ஒரு பெண் குழந்தையையும் பெற்றெடுத்தார்

## 3-வது தலைமுறையையும் பாதிக்கிறது

சிகரெட் பிடிப்பவர்களின் 3-வது தலைமுறையையும் பாதிக்கிறது. இதன் மூலம் அவர்களின் பேரக்குழந்தைகளும் ஆஸ்துமா நோய் தாக்குதலுக்கு ஆளாகி ன்றனர். இந்த தகவல் கலிபோர்னி யாவில் உள்ள ஹார்பர்-யூசி.எல்.ஏ. மெடிக்கல் சென்டர் நிபுணர்கள் நடத்திய ஆய்வில் தெரிய வந்தது. அவர்கள் கர்ப்பமாக இருந்த எலிகளிடம் ஆய்வு நடத்தி இதை கண்டறிந்துள்ளனர்.

சிகரெட் பிடிக்கும் அல்லது சிகரெட் புகையினால் பாதிக்கப்படும் கர்ப்பிணிகளின் வயிற்றில் வளரும் குழந்தைகளின் நுரையீரல் பாதிக்கப்பட்டு செயல்பாடு குறைகிறது. இதன் மூலம் ஆஸ்துமா உருவாகிறது. நிகோடினின் வீரியம் முதல் தலைமுறை குழந்தை களை தாக்காவிட்டாலும், ரத்தத்தில் தேங்கியிருந்து அது அவர்களின் குழந்தையை பாதிக்கும் என புதிய ஆய்வு தெரிவிக்கிறது.

## செவ்வாய் கிரகத்தில் உள்ள மனல் பூமியின் மணல் பரப்பை ஒத்துள்ளது




செவ்வாய் கிரகத்தில் உயிரின ங்கள் வாழ முடியும் என ஆய்வு நடத்த அமெரிக் காவின் 'நாசா' மையம் கியூரியாசிட்டி ஆய்வக விண்கலத்தை அனுப்பி வைத்துள்ளது. அங்கு அது போட்டோக்களை எடுத்து அனுப்பியும், பல ஆய்வுகளை மேற்கொண்டும் தகவல்களை பூமிக்கு அனுப்பி வருகிறது.அங்கு பூமியை போன்ற கனிம வளங்கள் இருப்பதற்கான அதிக வாய்ப்பு உள்ளது. இந்த தகவலை கியூரியாசிட்டி விண்கல ஆய்வகத்தின் தலைமை விஞ்ஞானி டேவிட் பிளேக் தெரிவித்துள்ளார்.

## சாண்டி கொலை செய்த அமெரிக்கர்களின் தொகை 100 ஆக உயர்ந்தது




அமெரிக்காவை உலுக்கிவரும் சாண்டி (Sandy) புயலால் கிழக்குக் கரையோரப் பட்டினங்களில் உயிரிழந்த அமெரிக்கர் களின் தொகை சதத்தைத் தொட்டுள்ளது. தற்போது வரை இக் கரைப்பிரதேசக் கிராமங்களில் வாழும் மக்களுக்கான தொடர்புகளை மேற்கொள்ள முடியாது அமெரிக்க அரசு அல்லலுறுகின்றது. தெருக்கள் புரட்டிப் போடப்பட்டுள்ளதால் எரிபொருள் மற்றும் மின் வினியோகங்க ளும் தடைப்பட்டுள்ளன. "நாங்கள் குளிரில் விறைத்துச் செத்த பிறகா அரசு எமக்கான உதவிகளைச் செய்யப்போ கின்றது" பெண் ஒருவர் கதறுவதை CNN வெளியிட்டுள்ளது

## ஹீத்ரோ விமான நிலையப் பங்குகள் - சீனாவிடம்




இலண்டன் ஹீத்ரோ விமான நிலைய உரிமைப் பங்குகளை தன்னகத்தே கொண்டிருந்த கம்பனியான ஹீத்ரோ ஏர்போர்ட் ஹோல்டிங்ஸ் எனும் கம்பனியின் 10 வீத பங்குகளை சீன அரிசின் நிதி நிறுவனமான 'சைனா இன்வெஸ்ட்மன் கோப்பரேசன' கொள்வனவு செய்துள்ளது. உலகின் மிகப் பெரிய விமான நிலையங்களில் ஒன்றான ஹீத்ரோ விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சீன முதலீடு ஐரோப்பிய நாடுகளை அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது. எனினும் பிரித்தா னியா சீனாவுடன் சிறுந்த வர்த்தகத் தொடர்புகளைப் பேணவே விழைகின்றது. இவ்வாண்டின் ஆரம்பத்தில் சீனாவின் இதே நிதி நிறுவனம் சுமார் 9வீதமான பங்குகளை இங்கிலாந்தின் கட்டுமானக் கம்பனியான 'தேம்ஸ் வோட்டர்' எனும் கம்பனியில் கொள்வனவு செய்திருந் தமை குறிப்பிடத்தக்கது.

## ஒரு குழந்தை கொள்கையில் சீனா மாற்றம்

சீனாவில்தான் மிக அதிகமாக 130 கோடி மக்கள் வசிக்கின்றனர். அங்கு மக்கள் தொகை பிரச்சினையை சரிகட்ட 1980 ஆண்டு முதல் கடந்த 30 வருடங்களாக ஒரு குடும்பத்திற் ஒரு குழந்தைக்கு பிறகு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்வது கட்டாயம் கடைபிடிக்கப்படுகிறது.கு ஒரு குழந்தை என்ற கொள்கையை கம்யூனிஸ்ட் அரசு சட்டமாக்கியுள்ளது.இந்த திட்டத்தினால் சீனாவில் எதிர் மாறான வளர்ச்சி, கருத்தரிப்பு பிரச்சினை, மூப்பு அடைதல், ஆண்-பெண் மலட்டுத் தன்மை மற்றும் குழந்தைகளுடன் மக்கள் அதிகம் இடம்பெயர்வதால் ஏற்படும் நகர விரிவாக்கப் பிரச்சினை போன்ற தடைகள் இருப்பதாக சீனா மேம்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் எச்சரித்துள்ளது. இதனால் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை கைவிட்டு மக்கள் தங்கள் சுய பகுத்தறிவின்படி இந்த வி'யத்தில் செயல்பட விடவேண்டும் என்றும் அந்த நிறுவனம் எச்சரிக்கிறது. இதனால் குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களில் மாற்றம் கொண்டு வரவேண்டும் என்று அதிகாரிகள், அறிஞர்கள் கொண்ட உயர்மட்டக்குழு தெரிவித்துள்ளது.

## ஒபாமாவுக்கு 48 சதவீதம் ஆதரவு



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் ஒரு வாரமே இருக்கும் நிலையில் அங்குள்ள பிரபல செய்தி நிறுவனம் புதிய கருத்து கணிப்பை நடத்தியது. இதில் ஒபாமாவுக்கு 48 சதவீதம் ஆதரவும், அவரை எதிர்த்து போட்டியிடும் மிட் ரோம்னிக்கு 47 சதவீதம் ஆதரவும் இருப்பது தெரியவந்துள்ளது.

## ஐநாவின் மனித உரிமை பூகோள காலக்கிரம மீளாய்வு

பூகோள மீளாய்வின் ஆரம்பகட்ட கூட்டங்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இலங்கை மீதான பார்வை 01.11.2012ல் நடைபெற்றுள்ளது. அமெரிக்கா, கனடா மற்றும் பிரான்ஸ் ஆகியவை இலங்கையின் மீது கடும் போக்கைக் கொண்டிருக்க சீனா, ஈரான் போன்ற சில நாடுகள் இலங்கைக்கான ஆதரவுப் போக்கை கடைப்பிடிப்பதாக தகவல் கிடைத்துள்ளது. இந்தியா கடும் போக்கிலேயே இருப்பதை ஆச்சரியமாக எல்லோரும் அவதானித்துள்ளனர். இறுதி அறிக்கை 05ம் திகதி வெளியாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன் எழுந்து நிற்கும் தமிழரின் தலைவிதிக் கேள்வி – எவ்வாறு ?

கூட்டமைப்பின் பலவீனங்களுள் அடுத்த பிரதானமான பலவீனமாக இருப்பது கிராம மட்டங்களில் மக்கள் கட்டமைப்புக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோற்றுவிக்காதிருப்பதே. மக்கள் கட்டமைப்புக்கள் என்றால் என்ன? என்று கேட்கும் அளவிற்கு இன்று கிராம மக்களின் நிலை உள்ளது. மக்கள் கட்டமைப்புக்கள் என்பது ஒவ்வொரு கிராமத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முகமான குழுவொன்றை அமைத்தலாகும். இக்குழுவின் நிர்வாக அங்கத்தவர்கள் ஆகக் கூடியது 5 பேரைக் கொடண்டமைய வேண்டும். அத்துடன் அவ்வைந்து பேரில் நிச்சயமாக 3 இளைஞர்களும் 2 முதிர்ந்தவர்களும் இருக்கவேண்டும். இளைஞர்களைக் கட்டாயம் உள்வாங்கிக் கொள்ள வேண்டிய காலக்கடமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உள்ளது. இதனைத் தமது சுயலாபம் கருதி சிலர் எதிர்த்தாலும் இளைஞர்களே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அடுத்த சந்ததிக்குத் தூக்கிச் செல்லும் ஆற்றலைக் கொண்டுள்ளனர். அத்துடன் புதிய சிந்தனைகளைப் பயமின்றிப் புகுத்தும் வல்லமையையும் அவர்கள் கொண்டுள்ளனர். அவர்களின் சிந்தனைகளை வழிப்படுத்துவதற்காகவே இரண்டு முதிர்ந்தவர்கள் அவ்வமைப்பினுள் உள்வாங்கப்படல் வேண்டும்.

" முதிர்ந்தவர்களும் இளைஞர்களும் " என்ற இச் சிந்தனையை பிரபல்யமான தமில் சினிமாவொன்றே தெளிவாக வெளிக்காட்டியது. "முதல்வன்" என்ற பெயரில் வெளியாகிய தமிழச் சினிமாவின் இறுதிக்கட்டத்தில் உருவாக்கப்பட்ட அமைச்சரவையில் "முதிர்ந்தவரும் இளைஞனும்" எனும் எண்ணக்கரு தோற்றுவிக்கப்பட்டது. சிலவேளைகளில் நீங்கள் "சினிமா யதார்த்த்திற்கு உதவாது" எனும் சிந்தனையைக் கொண்டவராக இருக்கலாம். அது நியாயமானதும் தான். ஆனால் சினிமாவிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் விடயங்களும் இருக்கின்றன. உதாரணமாக உலங்கு வானூர்தியொன்றை கட்டடமொன்றில் மோதி பழிதீர்த்துக்கொள்ளும் ஆங்கிலப் படமொன்று 2006ம் ஆண்டில் வெளியாகியது. சரியாக இரண்டு வருடங்கள் கழித்து அமெரிக்காவை அல் கொய்தா அதே பாணியில் பழிதீர்க்க முனைந்தது உங்களிற் பலருக்குத் தெரிந்திருக்கும்.

எனவே கிராமியக் கட்டமைபபுக்களை தற்போதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்படுத்தாமலிருப்பது அதன் பிரதான பலவீனமாகக் காணப்படுகின்றது. சரி, அக்கிராமியக் கட்டமைப்பின் ஊடாக நாம் எதைச் சாதிக்கப் போகின்றோம் என்னும் கேள்வி எமக்கு எழலாம்.

இலகுவாக இக் கேள்விக்கான விடையை நாம் தற்போது எரியும் பிரச்சனையாகவுள்ள "திவிநெகும" சட்ட மூலத்தின் மிக அடிப்படையான விடயத்தைத் தெரிந்துகொள்வதன் ஊடாகப் புரிந்து கொள்ளலாம். இச்சட்டமூலமானது வறியவர்களை வறுமைக் கோட்டிற்கு அப்பால் உயர்த்தும் கிராமிய வேலைத் திட்டங்களை நிகழ்த்தும் வலுவைக் கொண்டுள்ளது. அவ்வாறாயின் ஒவ்வொரு கிராமங்களையும் அதன் உயிரியக்கமான (lifeblood) மக்களையும் குறிவைத்து திவிநெகும நகரப் (Penitration) போகின்றது. அந் நகர்வின் ஊடாக அம்மக்களின் மனங்களில் யார்? பொறிக்கப்படப் போகின்றார்கள் என்பதும் எக்கட்சி ஆழமாக வேறூன்றப் போகின்றது என்பதும் எமக்கு வெளிப்படையாகத் தெரியும். எனில் ஏன் அவர்கள் கிராம மட்ட மக்களைக் குறிவைக்கின்றார்கள் என்பது புரிகின்றதா?

எமது தலைமைகள் சில வேளைகளில் நினைக்கலாம் "மக்கள் மாற மாட்டார்கள்" என்று. அதற்குரிய பதிலைத்



திருக்கோணமலை மாவட்டத்தின் மூதூர்ப் பிரதேசத்திலுள்ள கணேசபுரம் மக்கள் இம்முறை மாகாண சபைத் தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குச் சொல்லியுள்ளார்கள். அம்மக்களிற் பெரும்பாலானோர் அரச கட்சிக்கே தமது வாக்குகளை வழங்கியதாக நம்பத் தகுந்த செய்திகள் வெளிவந்தன. ஏன் அவ்வாறு நிகழ்ந்தது? அவர்கள் நீண்டகாலமாக தமது குறைகளான தெருவசதியையும், மின்சார வசதியையும் தமிழ்த் தலைமைகளுக்குத் தெரியப் படுத்தியிருந்து போதும் அவற்றை நிவர்த்திக்கும் எச்செயற்பாடுகளும் நிகழவில்லை. மாறாக இவ் விடயத்தை திருக்கோணமலையின் பிரதி அமைச்சர் ஒருவருக்குத் தெரியப்படுத்தியவுடன் தெருத்திருத்தமும், மின்சார இணைப்பிற்கான ஆரம்பக் கட்ட வேலைகளும் நடைபெறத்தொடங்கிய அதே காலகட்டத்தில் நிகழ்ந்த மாகாண சபைத் தேர்தலில் "செஞ்சோற்றுக் கடனாக" மக்கள் தமது வாக்குகளைப் பலியிட்டமை ஓர் பாடமல்லவா?

எனவே இவ்விரு உதாரணங்களும் கிராமிய மட்டக் கட்டமைப்பின் ,தேவை எவ்வளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எமக்குத் தெரிவிக்கின்றது.

சில சமயங்களில் "சிறு சிறு தேவைகளை நிறைவு செய்வதை பின்னர் பார்த்துக் கொள்ளலாம். முதலில் தமிழர் பிரச்சனைக்கான நிரந்தரத் தீர்வை பெற்றுக் கொள்ள முயற்சிப்போம்" எனத் தமிழ்த் தலைமைகள் எண்ணலாம். ஆனால் இவ்வெண்ணக்கருவிற்கும் எமது வரலாறு நல்ல படிப்பினையொன்றைக் கற்றுத் தந்துள்ளது.

எமது விடுதலைப் போராட்டத்தின் தலைவர் இதே சிந்தனையைக் கொண்டிருந்தார். பல தடவைகள் அவரது பேச்சுக்களும் தமிழர் தேசத்தை உருவாக்கிய பின்னரே ஏனைய எல்லா விடயங்களையும் சிந்திக்கலாம் என்பதாகவே இருந்தது. இச் சிந்தனையினால் சிறுகச் சிறுக மக்கள் ஆதரவை எமது சுதந்திர ஆயதப் போராட்டம் இழந்ததும் அதனைத் தொடர்ந்து சில பல அடக்குமுறைகளை அவர்கள் கைக்கொள்ளத் தொடங்கியதும் கண்கூடு.

எனவே தேசிய நலனை நோக்கி நகரும் பொழுது அதற்கிணையாக மக்கள் சக்தியையும் கட்டியெழுப்ப வேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உண்டு. அதற்கான மிகத் தேவையான அடிக்கட்டுமானமான கிராமிய கட்டமைப்பை தற்போதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்காமலே உள்ளது.

அவ்வாறான கிராமிய மட்டக் கட்டமைப்புக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்க முடியாமற் தடுக்கும் மிகப் பிரதான காரணியொன்று உண்டு. அக் காரணி எதுவென்று..... அடுத்த வாரம் பார்க்கலாமா?

**- மாயன் -**

# அரங்காடல்

## வெளி – 06

கலை கலாசார அபிவிருத்தி மையத்தால் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை இடம் பெறும் அரங்காடல் 26.10.2012 வெள்ளியன்று தனது ஒரு வருட நிறைவைப் பதிவு செய்தது.

கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் வெள்ளி மாலை 4.00 மணிக்கு தொடங்கிய அரங்காடல்









செல்வி. நவசஞ்சிதாவின் தமிழ் மொழி வாழ்த்தோடு தனது வெளி - 06 ஐ ஆரம்பித்தது. வழமை போலவே நிகழ்வுரையை நிகழ்த்திய ஸ்ரீ.ஞானேஸ்வரன் அவர்கள் "இவ் அரங்காடல் அனைவருக்குமான அரங்கு என்றும் எப்பொழுதும் கலைஞர்களுக்காக இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மூன்றாவது ஞாயிற்றுக்கிழமைகளில் இவ் அரங்கு திறந்தே கிடக்கும். நிகழ்த்திகாட்டுபவர்களை இவ்வெளி இன்னும் எதிர்பார்க்கிறது." என்றும் கலைஞர்களுக்கும், கலைகளுக்குமான அழைப்பை விடுத்தார்.

இந் நிகழ்வில் திருமதி கோ.சரிஸ்குமார் அவர்களின் செல்வ இசை நடன சபா மாணவிகளின் இரு நடனங்கள் மேடையேற்றப்பட்டதோடு, செல்வி.ஜெகதீஸ்வரி அவர்களின் கலைக் கோவில் நடனப்பள்ளி மாணவிகளின் கிராமிய நடனமும் நிகழ்த்திக் காட்டப்பட்டது.

அரங்காடல் நிகழ்வின் மத்தியில் வயலின் இசையை வழங்கிய ஆசிரியர் திருமாறனும் அவரது சகாக்களும் பார்வையாளர்களின் இசைத் துலங்கள்களை அரை மணிநேரமாக தங்கள் இசைவசமாக்கிச் சென்றனர்.



மேலும் சென்னை ஆகோள் ஆய்வு மைய முனைவர் அரங்கராஜ் அவர்கள் குமரிக்கண்ட வரலாறுகள் தொடர்பாக விரிவான விளக்கத்தை வழங்கியிருந்தார் எனினும் சபையோர் தரப்பிலிருந்து எழுப்பப்பட்ட கேள்விகள் குமரிக்கண்ட வரலாறுகளை முனைவர் இன்னும் விளித்துச் சொல்ல வாய்ப்பாய் அமைந்தது.

இறுதி நிகழ்வாக அரங்காலயாவின் பிரதீப் மற்றும் அவரது நண்பரால் நிகழ்த்தப்பட்ட அரங்காற்றுகை மரபுக்கும் நவீனத்துக்கமான வேறுபாட்டை சிலிர்புடன் பார்வையாளருக்கு உணர்த்தியது. செல்வி. பிரதீபாவின் நிறைவுரையுடன் அரங்காடல் வெளி - 06 முற்றுற்றதோடு தனது இரண்டாவது வருடத்தை நோக்கி தன் நாட்களை நகர்த்தத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உழைத்து வாழ்

- யசோதினி -

நரியும் ,ஓநாயும் ஒருமுறை தமது காட்டை விட்டு அருகிலிருந்த காட்டுக்கு வந்தன. அந்தக் காடு மிகவும் அழகானது. அவை அங்குள்ள மிருகங்களிடம் தம்மை அறிமுகப்படுத்தின. அவையும் சந்தோமாக அவற்றை வரவேற்றன. புது விருந்தினரை மகிழ்ச்சிப்படுத்தும் விதமாக அவற்றிற்கு தேவையான உணவுகள் .பழங்கள். பழரசங்கள் போன்றவற்றை உண்ண அளித்தன. அவை மிகவும் ருசியாக இருந்தன. இவ்வளவு ருசியான உணவுகளை ஓநாயும்,நரியும் இதுவரை சாப்பிட்டதேயில்லை. நரியும்,ஓநாயும் முன்பு உணவுக்காக நீண்ட தூரம் செல்ல வேண்டியிருந்தது. பல வேளைகளில் பட்டினியாக கிடந்ததும் உண்டு. ஆனால் இது நரிக்கும் ஓநாய்க்கும் புது அனுபவமாகி இருந்தது. என்ன அநுபவம் தெரியுமா? உழைக்காமல் சாப்பிடுவதுதான்.

உழைக்காமல் சாப்பிடுவதற்காக விருந்தாளியாகவே இருந்திட முடியுமா? நரி சிந்தித்தது. நரின் தந்திரபுத்தி வேலை செய்யத் தொடங்கியது. ஒரு யோசனயும் சிக்கவேயில்லை. என்ன செய்வது என்று யோசித்தது. ஓநாயிடம் " நாம் எப்போதுமே இப்படி சாப்பிட்டால் எப்படியிருக்கும்...? என்று நரி கேட்டது. ஓநாய்க்கும் இவ்வாறான சாப்பாடு சாப்பிட விருப்பம்தான். " இப்படி சாப்பாடு கிடைத்தால் நன்றாக இருக்கும். ஆனால்.... இப்படியான சாப்பாட்டிற்கு எங்கே போவது.." என்று பதில் சொன்னது. இவ்வாறு நல்ல சாப்பாடு கிடைக்க என்னால் யோசனை சொல்ல முடியும். நீ அதற்கு உதவுவாயா? என்றது நரி ஓநாயும் அதற்கு சம்மதித்து.

கிராமத்தலைவரான கரடி " இன்று நன்றாக ஓய்வெடுங்கள் நாளை உங்களை ராஜாவிடம் அழைத்துச் செல்கின்றேன். அவரது வரவேற்பு அங்கு எங்களை விட சிறப்பாக அமையும்" என்று கூறிவிட்டு சென்றது. இதுவரையும் யோசனை கிடைக்காத நரிக்கு திடீரென யோசனை கிடைத்தது. ராஜாவிடம் எப்படியாவது நல்ல பெயர் வாங்கினால் நிரந்தரமாக உழைக்காமலேயே ருசியாக சாப்பாடு சாப்பிடலாம் என முடி வெடுத்தது. எப்படி ராஜாவிடம் நல்ல பெயர் வாங்குவது............? யோசித்தது.

அன்று இரவு ஓநாயையும் கூட்டிக்கொண்டு காட்டை சுற்றிப்பார்க்கத் தொடங்கியது. நரியின் நல்ல காலமோ என்னவோ தெரியவில்லை. வேடன் ஒருவன் மிருகங்களுக்கு பொறி வைப்பதை அது கண்டது. நரியின் முகத்தில் அவ்வளவு சந்தோஷம். நரியும்,ஓநாயும் அவற்றின் இருப்பிட த்துக்கு சென்றன. நரி ராஜாவை சந்திக்க காத்துக்கொண்டிருந்தது.

ராஜாவை சந்திக்க கரடி, நரியையும் ஓநாயையும் அழைத்துச் சென்றது. அங்கு சிங்கராஜா கம்பீரமாக சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தார். சிங்கராஜாவின் வரவேற்பு மிக சிறப்பாக இருந்தது. நரிக்கு அப்போது ஒன்று புரிந்தது. என்ன தெரியுமா? இந்த காட்டு மிருகங்களை நன்றாக ஏமாற்றமுடியும் என்பதுதான். தனது நாடகத்தை அரங்கேற்றத் தொடங்கியது.

"மதிப்பிற்குரிய ராஜா அவர்களே, நான் ஒரு பிரபல சோதிடர். இவன் என் உதவியாளன். நான் இந்த காட்டுக்குள் வரும்போது என் ஞான திருஷ்டியில் ஒரு விடயம் பட்டது. அதை கூறலாமா? என்றது நரி. இதனைக் கேட்டு அங்குள்ள அனைத்து மிருகங்களும் சிரிக்கலாயின. சிங்கராஜாவுக்கும் சிரிப்பு வந்தத. "சரி நரியாரே செல்லும். நீர் சொல்வது பிழையாயிருந்தால் உமக்கு மரணம் நிச்சயம்.........." என்றார் ராஜா. ஓநாய்க்கு உடல் நடுங்கியது. நரி பயப்படாமல் " சரியாய் இருந்தால்...." என்று கேட்டது. ''முதலில் கூறும் அதன் பின்பு பார்ப்போம்" என்றது சிங்கராஜா.....

நரி கூறத்தொடங்கியது. "இந்தக்காட்டில் வடக்கு மூலையில் வேடன் பொறி வைத்துள்ளான். அதில் உம் மிருகங்கள் சிக்குண்டால் அதிக உயிர்ப் பலி ஏற்படும்.." என்றது. ராஜாவும் நரி சொல்வது உண்மையா என பார்க்க காவலாளிகளை அனுப்பினர். காவலாளிகள் வேடன் வைத் துள்ள பொறியை கண்டனர். நரி சொல்வது உண்மையென ராஜாவிடம் கூறினார்.

ராஜாவுக்கு நரியின் திறமையை பார்த்தது ஆச்சரியமாக இருந்தது. நரியை தனது 'ராஜ தந்திரி' ஆக்கினார். நரியும் தனது யோசனை நிறைவேறியதை இட்டு மகிழ்ச்சியடைந்தது.

ஆனால் ஒழுங்காக பரீட்சிக்காது ஒருவரை ராஜதந்திரி பதவிக்கு வைத்தது மந்திரியான யானைக்கு பிடிக்கவில்லை.

நரியோ ராஜாவிடம் நல்ல பெயரை வாங்குவதற்காக ஓநாயின் உதவியோடு அவ்வப்போது சில சில ஆலோசனைகளை முன்வைத்தது. அது பெரும்பாலும் சரியாகவே அமைந்தது. பிழையாக இருப்பினும் நரி தனது தந்திரத்தால் சரியாக மாற்றியமைத்தது. மந்திரி யானைக்கு சிங்கராஜா நரி சொல்வதை கேட்டு நடப்பது பிடிக்கவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் நின்றது. அன்று ஒரு இரவுவேளை காட்டினுள் இரு உருவங்கள் உலாவுவதை யானை கண்டது. யார் என்று பார்த்தால் நரியும், ஓநாயும். யானைக்கு ஓரளவு விடயம் விளங்க ஆரம்பித்தது. நரியின் உதவியாளனான ஓநாயை பிடித்தது. ஓநாயோ உயிர் பயத்தில் எல்லாஉண்மைகளையும் உலறியது.

உழைப்பதற்கு கஷ்டமான தால்தான் இவ்வாறு நடந்து கொண்டோம் என்று ஓணாய் கூறியது'

மந்திரி யானை சிங்கராஜாவிடம் ஓநாயை கொண்டு நிறுத்தியது. எல்லா உண்மைகளையும் சொல்லுமாறு கூறியது. ஓநாயும் சொன்னது. ராஜா நரிக்கு சிறந்த பாடம் ஒன்றை புகட்ட நினைத்தது.

அடுத்தநாள் நரியை அழைத்து சபைக்கு முன்னால் நிறுத்தியது. பலவாறு கேள்வி கேட்டது. ராஜாவின் கேள்விக்கு நரியால் பதில் கூற முடியவில்லை. ராஜா காவலாளிகளிடம் ஓநாயை அழைத்துவரச் சொன்னார். அவையும் அழைத்து வந்தன. நரிக்கு விஷயம் விளங்கிவிட்டது. இங்கிருந்து தப்பிக்க நினைத்தது.

மற்றைய மிருகங்கள் நரியை பிடித்து ராஜாவிடம் ஒப்படைத்தது. சிங்கராஜாவோ நரிக்கு தக்க தண்டனை கொடுத்தது. என்ன தண்டனை தெரியுமா...? 'உழைக்காமல் சாப்பிட நினைத்த இவர்கள் இருவரும் தினமும் இந்த காட்டினுள் மிருகங்களுக்கு வேலை செய்து கொடுத்து அவை தரும் உணவையே சாப்பிட வேண்டும். காட்டை விட்டு தப்பிக்க நினைத்தால் மரணம் நிச்சயம்' என்று தீர்ப்பு வழங்கியது.

ராஜாவின் தீர்ப்புக்கு ஓநாயும், நரியும் பணிய வேண்டி இருந்தது. ராஜாவின் தீர்ப்பை அனைத்து மிருகங்களும் ஏற்றுக் கொண்டன. தனக்கு உண்மையை புரியவைத்த மந்திரி யானைக்கு ராஜா நன்றியை தெரிவித்ததுடன் பரிசில்களையும் வழங்கியது.

உழைக்காமல் வாழ்ந்தால் இப்படித்தான் ஆகும். என்ற உண்மையை நரியும் ஓநாயும் புரிந்து கொண்டன. காட்டு மிருகங்களுக்கு வேலை செய்ய தொடங்கின.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்

1. இது மூன்றெழுத்துச் சொல்லாகும். முதல் எழுத்து வாழ்வில் உண்டு தாழ்வில் இல்லை. இரண்டாம் எழுத்து வனத்தில் உண்டு வரத்தில் இல்லை. மூன்றாம் எழுத்து கம்பியில் உண்டு கப்பியில் இல்லை.
   1. தானம் 2. வானம் 3. வாழ்வு

2. நான் பல நாடுகளில் உள்ளேன். பழமரத் தோட்டத்திலும் பூஞ்சோலையிலும் காணப்படுவேன். பூக்களில் இருந்து பழங்கள் தோன்றுவதற்கு உதவுவேன். எனது வாழ்க்கைப்பருவத்தின் ஒரு கட்டத்தில் மனிதனுக்கு தீமை செய்வேன். அப்படியாயின் நான் யார்?
   1. தேனீ 2. வண்ணாத்துப்பூச்சி 3. குளவி

3. தியானத்தின் இறுதிப் படிமுறை
   1. மன உறுதி 2. பிராத்தனை 3. மலர்வு

4. உடற்பயிற்சி தொடர்பான பிழையான கூற்று
   1. தசைநார்கள் விருத்தியடையும்
   2. நரம்புத் தொகுதி பாதிப்படையும்
   3. இதயம் வலிமையடையும்

5. ISBN என்பது
   1. புத்தகங்களுக்கான தரச்சான்றிதழ்
   2. பொதுவான தரச்சான்றிதழ்
   3. உணவுக்கான தரச் சான்றிதழ்

6. அமாவாசை தினத்தில் இருந்து 8ம் நாளில் வரும் அட்டமியை எவ்வாறு அழைப்பர்?
   1. பூர்வபக்க அட்டமி 2. அட்டமாஷ்டமி 3. பூரண அட்டமி

7. பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது மிக அவசியமாக அவதானிக்க வேண்டிய ஒரு விடயம்?
   1. உற்பத்தி செய்த நிறுவனத்தின் பெயர் 2. பொருளின் விலை
   3. காலாவதியாகும் திகதி

**8, 9 ம் வினாக்களுக்கு கீழ்வரும் தரவுகளைக் கொண்டு விடையளிக்குக.**

A,B,C,D,E என்பவர்களின் வயது 10 - 15 ஆகும். ஒருவரும் சம வயதுடையவர்கள் இல்லை. இவர்களுள் B யே மூத்தவர் ஆவார். C, A யை விட மூன்று வயது சிறியவர். E, Dயிலும் ஒரு வயது கூடியவர் ஆனால் B யை விட ஒரு வயது அதிகமானவர். A யிற்கும் B யிற்குமான வயதுகளின் வித்தியாசம் 3 ஆகும். C யின் வயது 11 எனின்,

8. A யின் வயது யாது?
   1. 12 2. 13 3. 14

9. A யிற்கும் E யிற்குமான வயதுகளின் வித்தியாசம் எத்தனை?
   1. 1 2. 2 3. 3

10. நான்கு வாகனங்கள் ஒரே இடத்தில் இருந்து புறப்பட்டு நான்கு மணித்தியாலங்களில் 16Km தூரம் சென்றன. எனின் ஒரு மணித்தியாலத்தில் ஒரு வாகனம் சென்ற தூரம் எவ்வளவு?
   1. 1Km , 2. 4 Km 3. 5 Km

11. 2மீ நீளமும் 8மீ உயரமும் உள்ள சுவருக்கு வர்ணம் பூசுவதற்கு 2லீ பூச்சு தேவைப்படும். எனின் 3மீ நீளமும் 8மீ உயரமும் உள்ள சுவரொன்றுக்கு வர்ணம் பூச தேவையான பூச்சின் அளவு யாது?
   1. 1லீ 2. 3லீ 3. 4லீ

12. அம்மு, பொம்மு ஆகிய இருவரும் வீட்டு முற்றத்தில் ஒரே இடத்தில் அமர்ந்திருந்தனர். அம்மு அவ்விடத்தில் இருந்து முதலில் கிழக்கு நோக்கி 100 மீற்றரும் பின்னர் தனது வலக்கைப்பக்கம் திரும்பி 100 மீற்றரும் சென்றான். பொம்மு முதலில் மேற்கு நோக்கி 50 மீற்றரும் பின்னர் தனது இடது கைப்பக்கத்துக்குத் திரும்பி 100 மீற்றரும் சென்றான். இப்போது அவர்கள் இருவருக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு?
   1. 150 மீற்றர் 2. 125 மீற்றர் 3. 225 மீற்றர்

13. 4,5,6,7,8 ஆகியவற்றுக்கு முறையே உ, எ, ஒ, ல, ம என்னும் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனின்,
   உஒல + மல = ___________
   1. எஎஒ 2. எஎஉ 3. லமஒ

14. ஒரு மைதானத்தைச் சுற்றி வட்ட வடிவில் கொடிக்கம்பங்ள் நடப்பட்டுள்ளன. முதலாவது கம்பத்திற்குப் பின்னால் ஆறு கொடிக்கம்பங்கள் உள்ளன. முன்னால் பதினொறு கொடிக்கம்பங்கள் உள்ளன எனில், மைதானத்தைச் சுற்றி எத்தனை கொடிக்கம்பங்கள் உள்ளன?
   1. 18 2. 17 3. 11

15. 8943 என்ற எண்குறியில் இலக்கம் 9 இன் இடப் பெறுமானம் யாது?
   1. ஆயிரம் 2. நூறு3. பத்து

16. 12 கிலோகிராம் சீனியில் எத்தனை 250 கிராம் பைக்கற்றுக்கள் தயாரிக்கலாம்?
   1. 48 2. 24 3. 40

- பிரதீபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அரசியலை வீசும் "சாட்டை"

## திரைப்படம் ஒரு பார்வை

ஒரு மாணவனிடம் உள்ள திறமையை தட்டிவிட்டு தலை நிமிர்த்துவதும் இல்லையேல் அவனை தரைமட்டமாக்குவதும் ஒவ்வொரு ஆசிரியரின் கையில்தான் உள்ளது என்ற கருத்தை, அரச பாடசாலையில் பணிபுரியும் ஆசிரியர்களின் அணுகுமுறைகளை 'சாட்டை' யால் அடித்திருப்பதோடு, அதன் அவலநிலையையும் கலந்து 'எச்சரிக்கை' மணியை ஓங்கி அடித்து எங்கள் பார்வைக்கு வந்துதான் சாட்டை.

ஐந்து பாடல்கள், நான்கு சண்டை காட்சிகள் என மசாலாவை தூறி எமக்கு தரும்



தமிழ் திரைத்துறை சில நல்ல படங்களை தராமலும் இருப்பதில்லை.

அவ்வாறன வரிசையில் இயக்குனர் பிரபுசாலமன் தயாரிப்பில் வந்ததுதான் சாட்டை என்ற கல்வி அரசியலை பேசும் படம். சில வருடங்களுக்கு முன் வந்த 'பசங்க' என்ற படம் பேசப்படாத பாடசாலை மாணவர்களின் பிரச்சனையை மெதுவாக பேசியது அப்படத்திற்கு தேசியவிருது கூட கிடைத்தது. ஆனால் பசங்க படத்தில் பேசாமல் விடப்பட்ட கல்வி அரசியலை இந்தப் படம் காரசாரமாக பேசியிருக்கிறது.

பாடசாலைக் கல்வியை வியாபார மாக்கிவிட்ட சூழலில் அரசுப் பள்ளிகளில் இன்று நடக்கும் அவலம் அப்படியே இயக்குனர் அகத்தியனின் பட்டறையிலிருந்து வந்த இயக்குனர் அன்பழகனால் தோலுரிக்கப் பட்டுள்ளது

தனது முதல் படத்திலே ஒரு மிக முக்கியமான அரசியலை பேசும் படத்தைச் சமரசங்களின்றி இயக்கியிருக்கும் அன்பழகனை நாம் பாராட்டியே ஆக வேண்டும்.

தூக்கி எறியும் சண்டை காட்சிகளோ நூற்றுக்கணக்கான துணை நடிகர்களுடன் சேர்ந்து ஆடும் பாடல் கட்சிகளோ எதுவும் இல்லாத சந்தர்பத்தில் அதிகமான பாடசாலை காட்சிகளில் தன் உச்ச திறமையை காட்டிச் சென்றிருக்கிறார் ஒளிப்பதிவாளர் ஜீவன், பள்ளிக்குள்ளே சுற்றி வருகிற ஒளிப்படக்கருவி எந்த நெருடலும் இல்லாமல் நம்மையும் அங்கு கூட்டிச்சென்று விடுகிறது.

நல்லாசிரியருக்கான அத்தனை தகுதியும் கொண்ட ஆசிரியராகத் தயாளன் என்ற காதாபாத்திரத்தில் சமுத்திரக்கனி நன்றாக வாழ்ந்திருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். ஆனாலும் அவர் கடைசியாக நடித்த ஈசன் பட காவல்துறை அதிகாரி கதாப்பாத்திரத்தில் இருந்து இன்னும் வெளிவரவில்லை போல.. எந்நேரமும் முகத்தை விறைப்பாக வேவைத்திருகிறார். விறைப்பை கொஞ்சம் குறைத்திருக்கலாம். மிகுந்த பொறுப்புணர்வுடன் அவர் நடந்து கொள்ளும் விதம், அனைவரும் தன்னைத் தாக்கும் போதும் தன்னுடைய மாணவிக்காக அடிவாங்கிக் கொள்ளும் குணம், எந்த சூழலிலும் மாணவர்களை விட்டுக் கொடுக்காமல் பேசுவது என ஒரு உண்மையான ஆசிரியராக வாழ்ந்திருக்கிறார்.


தம்பிராமையா.. படத்தின் இன்னுமொரு கதாநாயகன். படத்தில் வில்லனாக நக்கலுடன் மிரட்டி இருக்கிறார். வில்லத்தனமான ஆசிரியராக பிரித்துமேய்ந்து விடுகிறார். முடியை ஒதுக்கிவிட்டு வழுக்கை தலையில் வடியும் வியர்வையைத் துடைத்துக் கொண்டே ரணகளம் பண்ணியிருக்கிறார். சொல்லப்போனால் படம் விறுவிறுப்பாகப் போவது தம்பிராமையாவின் சேட்டைகளால் தான்.

**படத்தின் சுவாரஸ்யங்கள்...**

முதல் காட்சியில் உந்துருளியில் வரும் சமுத்திரகனிநம்மவர் கமலைநினைவுபடுத்துகிறார் முக்கியமாக பிள்ளைகளுக்கு வகுப்பு எடுக்கும் காட்சிகளில் நமக்கு பிடித்த ஒரு ஆசிரியராக நம் கண் முன் நிற்கின்றார். வேக வாசிப்பு பயிற்சி, நினைவு அதிகரிக்கும் பயிற்சி, தோப்புக்கரணம் போட்டால் ஞாபகசக்தி அதிகரிக்கும் என்பது போன்ற பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கும் காட்சிகள் சுவாரஸ்யம்.

முக்கியமாக பெண்கள் கழிவறையை எப்படி இருக்கு என்று எட்டிபார்த்து தண்டனை அனுபவிக்கும் மாணவனை பாராட்டி பேசும் காட்சிகள் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுபதம். வெகு நாட்களுக்கு பிறகு ஜுனியர் பாலைய்யா..... பாடசாலை அதிபராக நடித்து இருக்கின்றார்.. அவர் தம்பிராமய்யாவின் அதட்டல் உருட்டலுக்கு பயப்படும் இடங்களில் கலக்கி இருக்கிறார். தம்பிராமய்யா வரும் அனைத்து காட்சிகளும் சுவாரசியம்தான். பிளாக் பாண்டி, யுவன், சதிஷ் மகிமா போன்றவர்கள் மாணவர்களுக்கான பாத்திரத்தை சிறப்பாகவே செய்து இருக்கின்றார்கள்..

இமானின் இசைபடத்துக்கு பெரியபலம்.. பாடசாலை ஆசிரியர்கள் செய்யும் கல்வி அரசியலால் பாதிக்கப்பட்ட மாணவர்கள்




அனைவருக்கும் இருந்தஏக்கங்கள் கோபங்கள் அனைத்தையும் இந்தப் படத்தில் காணமுடிந்தது. ஒவ்வொருகாட்சியும் அதில் வரும் வசனங்களும் பிரமாதம்.. கேவலமான கல்வி அரசியலை இன்னும் ஆழமாகப் பேசியிருக்கலாம். ஆனாலும் வீரியம் குறைந்து விடவில்லை.

அன்பழகனின் கூர்மையான வசனங்கள் படத்திற்கு இன்னுமொரு பலம் 'ஏணியை கூரை மேல போடாதீங்க, வானத்தை நோக்கிப் போடுங்க...' என்ற ஒரு வசனமே போதும் இயக்குனரின் தரத்தைச் சொல்ல..

இன்றைய காலத்திற்க்குத் தேவையான கதை, சில அரச பாடசாலைகளின் நிலைமை, நல்ல ஆசிரியருக்கான அடையாளம் என்ன? என்பதைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளதால் நிச்சயம் பாராட்டப் படவேண்டிய, அதேசமயம் பார்க்கவேண்டியபடம்...! இந்த படத்தை மாணவர்கள் பார்க்கிறார்களோ இல்லையோ, கட்டாயம் அனைத்து ஆசிரியர்களும் கல்வி வியாபாரிகளும் பார்த்தாக வேண்டும்.

## மரியம் என்பவள் கற்களால் எறிந்து கொல்லப்படும் போது அளித்த வாக்கு மூலம்

ஆங்கில மூலம் : பிரியா சருக்கே சயேயா
தமிழில் : கஞ்சாக் கறுப்புக் கள்ளன்
நன்றி - மறுபாதி (கவிதைக்கான காலாண்டிதழ்)

ஆம் இது உண்மை. இவை எல்லாமே உண்மையே
எமது உடலில் ஒரு கெட்ட தேவதை உள்ளது
ஆம் இது உண்மை. இவை எல்லாமே உண்மையே

அந்த வறண்ட மலைகளில்
எனது கணவன் கல்வெட்டுபவன்
அது உண்மை
அவன் கற்களை தோண்டுபவன்
அவன் அவற்றை அரைத்துப் பொடியாக்குவான்
அந்தப் பொடிகளிலிருந்து வர்ணங்களை ஆக்குவான்
உண்மை சொர்க்கங்களும் வானங்களும் அவனால்
வரையப்பட்டன.
உண்மை இரகசியமாகத்தான்
அவன் சித்திரங்கள் வரைவான்
இது உண்மை
ஆம் அவன் என்னிலிருந்து
விலகினான் அது உண்மை
அவன் போர்க்களத்தில் இறந்திருக்கலாம்
அவன் உடல்.
பல வர்ணங்களாகச் சிதைந்திருக்கலாம்
ஆம், நான் துக்கம் காத்தேன்
காத்தேன்
அது உண்மை உண்மை தான்
எனது துயரத்தில் நொறுங்கிப் போனேன்
பின் அவற்றை மறந்து போனேன்
இது கூட உண்மை தான்
ஒரு மருமகளின் கடமையை
மறந்து போனேன்
எனக்கு வயதோ பதினேழு தான்
ஆம், என் கையை ஒருவன் முத்தமிட்டான்
நான் அவனை என்னுள் இழுத்துக் கொண்டேன்
எனது உள் அங்கங்கள் கனிந்தன
சந்தோசத்துடன் திறந்து கொண்டேன்
இது உண்மை தான்
ஒரு கற்புஷ்பம் கனிந்தது
இழைந்து கொடுத்தது
சந்தோஷத்துடன் திறந்து கொண்டேன்
ஆம் இது உண்மை தான்
அவனது தழுவல் முகத்தில் கண்களில்
மலரை வருடுதல் போலாகியது
நான் தூய நீராக
மாறினேன்
உண்மை
எனது அணைப்பிலிருந்து
யுத்தம் அவனை உறுஞ்சியது
இது கூட உண்மையே
ஆனால் இதற்கு முன்பே
நாம் அடையாளம் காணப்பட்டோம்
நான் பிடிபட்டேன்
அவன் இருட்டினுள் கரைந்தான்
ஆம் நாம் கேள்வியுற்றேன்
அசனும் வீரமரணம் அடைந்ததாக
நான் கருங்கல் குன்றாக நின்றேன்
மீண்டுமொருமுறை நிற்பேன்
சாகும் வரை கல்லால் எறியப்படுவதற்காக
நான் நிற்பேன்
கற்கள் என் கண்களின் பற்களில்
மூளையில்
ஆம், ஆம் ஊளையிட்டு அலறும்
மிருகமாக்
உங்களால் ஆக்கப்பட்டுள்ளேன்
இது உண்மையாக்கப்படும்
எனது ஒரே உண்மையை
நீங்கள் இப்படி
ஆக்குவீர்கள்.

**உங்கள் பிரதேச செய்திகளை உடனுக்குடன் மலைமுரசுக்கு தெரிவியுங்கள்**
malaimurasu@hotmail.com
075 42 52 042

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## Sunday Observer:

### மீன்பிடிப்படகு கடத்தல் – 14 சந்தேக நபர்களை திருப்பியது அவுஸ்திரேலியா –

குடாவெல கடல் பிரதேசத்திலிருந்து கடத்தப்பட்ட " செஜன் " மீன்பிடிப் படகில் அவுஸ்திரேலியாவிற்கு பயணம் செய்த சட்ட விரோத குடியேற்றவாசிகள் 14 பேரையும் தடுத்து நிறுத்திய ஆஸி கடற்படை அவர்களை விசேட விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்பிவைத்துள்ளது. கொக்கோ தீவுகளுக்கு அண்மையில் கைது செய்யப்பட்ட 15 பேர்களில் 14 பேர் திருப்பப்பட்டுள்ளதுடன் மற்றையவர் பின்னர் அனுப்பிவைக்கப்படவுள்ளார்.

இம் மீன்பிடி ரோலரின் மீன்பிடியாளர்கள் 05 பேரைக் கடலில் வீசிய இச்சட்டவிரோத குடியேற்ற வாசிகள் படகைக் கடத்திச் சென்றிருந்தனர். கடலில் விசப்பட்ட ஐவருள் இருவர் மட்டுமே காப்பாற்றப்பட்டுள்ளனர். ஏனைய மூவரும் தற்போது வரை காணாமற் போயுள்ளனர். இக் கடத்தலுக்கு தலைமைதாங்கியவரும் மீன் பிடிக்கப் போன 6 மீனவர்களுள் ஒருவர் என்பது குறிப்பிடதக்கது.

### பகற்கனவு காணும் மனோ கணேசன் – கெஹலிய

எட்டு மாகாணசபைகளை ஐந்தாக குறைக்கும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது என மனோகணேசன் கூறியிருப்பது அவர் பகல்கனவு காண்பதாகவே உள்ளது என கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

### இலங்கை மத்தியவங்கி 2011ல் உலகிலேயே உயர்ந்த இலாபம் உழைத்தது

இலங்கையின் மத்திய வங்கி கடந்த ஆண்டுகளில் மேற்கொண்டிருந்த சிறந்த நிதி முகாமைத்துவத்தின் ஊடாக 2011ல் சுமார் 6.6 வீத வருமானத்தை தனது வெளிநாட்டு ஒதுக்குகள் ஊடாக உழைத்துள்ளது. அவ்வாண்டில் உலகில் எந்தவொரு நாட்டினதும் மத்தியவங்கிகள் இவ்வளவு தொகையை உழைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## The Sunday Leader

### 99 நாடுகளின் கேள்விக் கணைகள். பூகோள மீளாய்வில் இலங்கை மீது

ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ள பூகோள மீளாய்வின் போது கேட்கப்படவேண்டிய கேள்விகளை முன்னரேயே 99 நாடுகள் இலங்கையிடம் கையளித்துள்ளன. ஒவ்வொரு நாட்டிற்கும் 1 நிமிடமும் 12 செக்கன்களும் கேள்வி கேட்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் வினாக்களில் வடபகுதிக்கான மாகாணசபைத் தேர்தல் ஏன் இன்னமும் நடத்தப்படவில்லை? எனும் கேள்வியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்துடன் சாட்சிகளையும் பாதிக்கப்பட்ட தரப்பினரையும் பாதுகாக்கும் சட்டநியதிகளை இயற்றுவதாக 2008ம் ஆண்டில் நிகழ்ந்த முதலாவது பூகோள காலக்கிரம மீளாய்வில் இலங்கை அளித்த வாக்குறுதி தொடர்பாகவும் அமெரிக்கா கேள்வி எழுப்பியுள்ளது. மேலும் சனல் 4 திரைப்படம் தொடர்பாகவும் ,பொத்துவிலில் கொள்ளப்பட்ட 10 வேலையாட்கள் தொடர்பாகவும், சண்டை லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பாகவும் தொலைந்து போன கேலிச்சித்திரக் கலைஞர் பிரகித் எக்னலி கொட தொடர்பாகவும் அமெரிக்கா கேள்விகளை எழுதியுள்ளது.

கனடாவின் முக்கிய கேள்வியானது " மெனிக் பாம் மூடப்பட்டாலும் இடம்பெயர்ந்தவர்கள் தமது உண்மையான இருப்பிடங்களில் மீள்குடியேற்றப்பட வில்லை என்பதால் மீளகுடியேற்றம் தொடர்பான உலக சாசனத்தின் சரத்துக்கள் மீறப்பட்டுள்ளன." என்பதாய் உள்ளது. மேலும் எப்போது இலங்கை தகவல் அறியும் சட்டத்தை அமுலாக்கவுள்ளது என்றும் 13ம் திருத்தச் சட்டத்தின் முழு அமுலாக்கம் தொடர்பாக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன? என்பதையும் கனடா கோரியுள்ளது.

பிரித்தானியா " போர்க்குற்றங்கள் தொடர்பான இராணுவ விசாரணை " முடிவுகள் தொடர்பாக கேள்வி எழுப்பியுள்ளது.

பிள்ளையானைச் சந்திக்கவுள்ள இராசதந்திரிகள் முன்னால் கிழக்குமாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனை வெளிநாட்டு இராசதந்திரிகள் 13A சட்டமூலம் தொடர்காக சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

### வடமாகாணசபைத் தேர்தலுக்கு நாம் தயார் – தேர்தல் ஆணையாளர்.

வடமாகாணசபைத் தேர்தலை எப்போது நடாத்தவும் தாம் தயாராகவுள்ளதாக தேர்தல் ஆனையாளர் அறிவித்துள்ளார்.ஆனால் தற்போதுவரை அரசாங்கம் இத் தேர்தல் தொடர்பாக எவ்வித அறிவுறுத்தலையும் தமக்கு வழங்கவில்லை என அவர் மேலும் விளம்பினார்.

### KPக்கு எதிரான பிடியாணை

சர்வதேச காவல்துறையால் பிறப்பிக்கப்பட்டுள்ள KP க்கு எதிரான பியாணையை இல்லாமல் செய்யும் கோரிக்கையை இந்தியாவால் மட்டுமே மேற்கொள்ள முடியும் என இலங்கைக் காவல்துறை தெரிவித்துள்ளது.மேலும் KP மீது காவல்துறை விசாரணைகள் எவையுமில்லை எனவும் காவல்துறைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

### தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் நிதித்துஸ்பிரயோகம்.

சிறுவர் பாதகாப்புத் திட்டங்களுக்கென பெறப்பட்ட வெளிநாட்டு நிதியை அத்திட்டங்களுக்குச் செலவு செய்யாமல் வாகன திருத்தங்களுக்கும், நிழற்படப் பிரதி இயந்திரக் கொள்வனவுக்கும், காணிக் கொள்வனவு தொடர்பான பெறுமதி சேர்வரிக் கொடுப்பனவிற்கும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பயன்படுத்தியுள்ளது தெரியவந்துள்ளது.

## The Sunday Times:

### எரிபொருள் தட்டுப்பாடு – கூடிய தயை காலத்தை அமெரிக்கா வழங்க வேண்டும்.

எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்க ஈரானிடமிருந்து எரிபொருளை இறக்குமதி செய்ய அனுமதிக்க வேண்டும் என வோசிங்டனை நோக்கி கோரிக்கைகளை அனுப்ப வேண்டியுள்ளது அரசு என பெற்றோலிய வளத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். 'நாங்கள் அமெரிக்க அரசுடன் ஈரானிலிருந்து எரிபொருளை இறக்குமதி செய்யும் விடயம் தொடர்பாகக் கட்டாயம் பேச வேண்டியுள்ளது.

ஏனெனில் மசகு எண்ணை இறக்குமதிச் செலவு ஏனைய நாடுகளிருந்து இறக்குமதி செய்யப்படும் போது 5 பில்லியன் அமெரிக்க டொலர் அல்லது 650 பில்லியன் ரூபா உயர்வாக உள்ளது' என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்கா 10 கப்பல் மசகு எண்ணையை ஈரானிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதித்துள்ள போதும் ஈரானுடனான அமெரிக்க டொலர் பரிமாற்றத்தை அனைத்து சர்வதேச வங்கிகளும் நிறுத்தியுள்ளதால் அரசு பணக்கொடுக்கல் வாங்கலில் பெரும் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இறக்குமதி செய்யப்படும் மசகு எண்ணையின் விலை 1.2 பில்லியன் ரூபாவிலிருந்து 38 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது. மசகு எண்ணையின் இறக்குமதித் தடையால் சப்புஸ்கந்தையின் எண்ணை சுத்திகரிப்புப் பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இவற்றைக் தவிர கொழும்பு உயர்நீதிமன்றத்தில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு எதிராக வழக்கொன்றை "டிரேட் வென்சர்ஸ்" எனும் இலண்டனில் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமொன்று தாக்கல் செய்துள்ளது. கட்டணங்கள் செலுத்தப்படவில்லை எனக் குற்றமிட்டு 650,246.83 அமெரிக்க டொலர்களையும் 6590 பிரித்தானிய பவுன்களையும் நட்ட ஈடாகக் கோரியே இவ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### தமிழ் தேசிய கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவதில் இழுபறி. –

தமிழ் தேசிய கூட்டமைப்பினைக் கட்சியாகப் பதிவதற்கு அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் இணங்கியுள்ள வேளை தமிழ் அரசுக் கட்சி அவ்வாறு பதிவதற்கான முடிவைப் பின்தள்ளிப் போட்டுள்ளது. தமிழரசுக் கட்சித் தலைவர் இரா சம்பந்தன் " இந்த விடயம் இப்போது முக்கியமானதல்ல " என்பதாலேயே கூட்டமைப்பை கட்சியாகப் பதிவதை பின்போட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். தமிழர்களுக்குரிய தீர்வுக்கு முன்னுரிமை வழங்குமாறும் கூட்டமைப்பைப் பதிவதை பின்னர் யோசிக்கலாம் எனவும் சம்பந்தர் கோரியுள்ளார்.

### பெற்றோலியக் கூட்டுத்த ாபனத்திலிருந்து மின்சார சபைக்கு வேண்டுகோள் –

பணமுடையிலுள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தமக்குச் செலுத்த வேண்டிய சுமார் 50 பில்லியன் ரூபாய்களைச் செலுத்துமாறு மின்சார சபையிடம் கோரியுள்ளது. மின்சார உற்பத்திக்காக வழங்கப்பட்ட எரிபொருளின் நிலுவையையே பெற்றோலிய கூட்டுத்தாபனம் கோரியிருந்தது.

மின்சார சபை மாதாந்தம் 1.3 பில்லியன் ரூபாய்களை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்திவருகின்ற போதிலும் நிலுவையிலுள்ள 50 பில்லியன் ரூபாய்களைச் செலுத்த தவறிவருகின்றது என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கூறியுள்ளது.


### கூடங்குளம் – இராச தந்திர நகர்விற்குத் தயாராகும் அரசு.

கூடங்குளம் அனு மின்நிலையப் பாதுகாப்புப் பொறிமுறைக்குள் இலங்கையும் உள்வாங்கப் படுவதை உறுதி செய்யும் முகமாக இராச தந்திர நடவடிக்கைகளுக்குள் அரச இறங்கவுள்ளது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் "மேலதிக இராச தந்திர நகர்வுகளை இலங்கை மேற்கொள்ளும்" எனக் கூறியுள்ளார். மேலும் " ஒரே இரவில் இந்தியாவின் சிந்தனையை மாற்றிவிட முடியாது. இவ் வகையான உணர்திறன் பிரச்சினைகளைச் சரியாக கையாள வேண்டும்" எனவும் அவர் தெரிவித்தார்.

### யாழ்ப்பாணம் என்ற போர் விமானம் பிரித்தானியப் படையில்

(T.P.திருசிகன்)




மறைந்து போன மற்றும் மறைக்கப்பட்ட நம் கடந்த காலங்களை நாம் திரும்பிப் பார்க்கும் காலகட்டத்தில் இருக்கிறோம்.

ஒரு ஆங்கிலய விமானபடையில் தமிழ் பெயரில் ஒரு போர் விமானம் இருந்திருக்கிறது. இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற காலப் பகுதியில் ஜப்பானியர் மலேசிய மக்களுக்கு இளைத்த துன்பத்தால் மலேசியாவில் வசித்த ஈழத் தமிழர்கள் பிரித்தானிய அரசுக்கு சாதகமாக செயற்பட விரும்பியுள்ளனர்.

இதற்காக பணசேகரிப் பின் மூலம் கிடைத்த பணத்தில் பிரித்தானிய விமானபடைக்கு போர் விமானத்தை வாங்கி அதனை கொடுத்துள்ளனர்.

1915ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ம் திகதி விமானத்தை பொறுப்பேற்ற பிரித்தானிய விமானபடையினர் அதற்கு யாழ்பாணம் என பெயர் சூட்டி தங்களது தாக்குதல் பணிக்கு பயன்படுத்தி வந்திருக்கின்றனர்.

சுமார் 97 ஆண்டுகளுக்கு முன்னர் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதற்கான ஆவணங்களும், புகைப்படங்களும் தற்போது வெளியாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இருவரும் . . . .**

திப்புளோமா மாணவர்களே உள்வாங் கப்பட்டிருந்தனர்.

முதல் ஆறுமாதகாலப் பயிற்சிக்கான நியமனக் கடிதங்களைப் பெற்றிருந்த நியமனதாரிகளின் முதற் சேவைக்காலம் 30.11.2012ல் முடிவுறுகின்றது. இச் சேவைக்காலத்தின் பின் சுமார் 16,000 பட்டதாரிகளை பொருளாதார அமைச் சிற்குள் உள்வாங்கி மேலும் ஆறு மாதகால பயிற்சிக்குள் உள்ள டக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான நியமனங்கள் இம்மாதத்தின் முதல் வாரத்திலேயே வழங்கப்பட வுள்ளதாகவும் அவ்வாறு நியமிக்கப் படுபவர்கள் திவிநெகுமத் திணைக் களத்திற்குள் உள்வாங்கபபடப் போவதாகவும் பட்டதாரிப் பயிலுனர்கள் தெரிவித் தார்கள்.

இதற்காக மாவட்டங்களின் பிரதேச செயலாளர்களிடம் பெயர்களை முன்மொழியுமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கோரியிருந்தது. அதற்கமைய திருக்கோணமலை மாவட்டதிலிருந்து முன்மொழியப்பட்ட பெயர்களுள் உயர் தேசிய திப்புளோமா மாணவர்களின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் அப் பெயர்களுக்குப் பதிலாக அங்கீகரிக்கப் பட்ட பல்கழைக்கழகப் பட்ட தாரிகளின் பெயர்களையே முன்மொழியுமாறு பிரதேசச் செயலாளர்கள் மீளவும் கோரப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

1990ம் ஆண்டின் 46ம் இலக்கச் சுற்று நிருபமானது உயர் தேசிய திப்புளோமாப் பட்டமானது அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் சாதாரண தரப் பட்டத்திற்குச் சமனான பட்டமாக அரச நியமனங்களின் போது கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றது.

பிந்திக் கிடைத்த செய்திகளின் படி பொருளாதார அபிவிருத்தி அமைச்சினுள் உள்ளடக்கப்படப் போகும் பட்டதாரிகள் துறைசார் பட்டங்களைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என அமைச்சு கோரியுள்ளதாக தெரியவந் துள்ளது. இதன்படி விவசாயம், பொருளியல், சூழலியல், புவியியல் போன்ற துறைசார் பட்டங்களைப் பெற்றுக் கொண்டவர்களையே பொருளாதார அமைச்சு உள்வாங்க வுள்ளதாக தெரியவருகின்றது.

எனினும் உயர் தேசிய திப்புளோமா மாணவர்களின் எதிர்காலம் தொடர்பாக எந்தவொரு அலுவலராலும் உறுதி கூறமுடியாதிருப்பதாக நியமனம் பெற்றுள்ள பட்டதாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

திருக்கோணமலை மாவட்டத்தைப் பொறுத்தளவில் அரச அதிபரும், பிரதேசச் செயலாளர்களும் உயர் தேசிய திப்புளோமா மாணவர்களின் நியமனம் தொடர்பாக கடும் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகவே தெரியவருகின்றது. இவ் அரசாங்க அதிகாரிகள் திப்புளோமா மாணவர்களுக்கும் நியமனங்களைப் பெற்றுக்கொடுப்பதில் முனைப்புக்காட்டி வருகின்றனர்.

நியமனம் பெற்றுள்ள திப்புளோமா மாணவர்களைத் தொடர்புகொண்ட போது அவர்களிற் பலர் சுமார் 30 வயதடைந்தவர்களாக இருப்பதுடன் முன்னர் அரசு சாரா நிறுவனங்களிலும், தனியார் துறையிலும் பணியாற்றிவிட்டு அரச நியமனத்திற்காக அப் பதவிகளைத் துறந்து வந்தவர்ளாக இருப்பது தெரியவந்துள்ளது. தமக்கு அரச நியமனம் கிடைக்காது விட்டால் தமது எதிர்காலம் கடுமையான வாழ்வாதாரக் கேள்விகளை உள்ளடக்கப்போவதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

2004ம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் வழங்கப்பட்ட அரச நியமனங்களில் திப்புளோமாப் பட்டதாரிகள் உள் வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 18 மாதங் ....

2011 ம் ஆண்டில் நடைபெற்ற பழைய மற்றும் புதிய பாடத்திட்டத்திற்கான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் உரிய காலத்தில் வெளியாகியிருந்தன. அதனைத் தொடர்ந்து அவ்விரு பாடத்திட்டத்திற்கான இஸட் புள்ளிகளும் வெளியாகின.

இருபாடத்திட்டத்திற்கும் ஒரே வகையில் இஸட் புள்ளிகள் கணிக்கப் பட்டமை தவறானது என கல்வியிய லாளர்கள் உட்பட மாணவர்களும் கேள்வி எழுப்பத் தொடங்கியதைத் தொடர்ந்து சில மாணவர்களால் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அவ்வழக்கின் முடிவில் இஸட் புள்ளிகளை இரண்டு பாடத்திட்டத்திற்கும் தனித்தனியாகக் கணிக்குமாறு வழங்கப்பட்ட தீர்ப்பைத் தொடர்ந்து புதிய இஸட் புள்ளிகள் வெளியிடப்பட்டன.

அடுத்து பல்கலைக்கழக விரிவுரையா ளர்களின் பணிப்புறக்கணிப்பு பல மாதங்களுக்கு நீடித்தது. கடந்த மாதத்திலேயே அப் பணிப்பபுறக் கணிப்புப் பிரச்சனை தீர்வுக்கு வந்துள்ள நிலையில் பணிப்புறக்கணிப்பால் நடாத்தப்படாத பாடவிதானங்களை நடாத்தி முடிப்பதனையை பல்கலைக் கழகங்கள் தமது முதன்மை இலக்காகக் கொண்டு கல்வி நடவடிக்கைகளை இவ்வாண்டின் இறுதிக் காலாண்டில் விரைவுபடுத்தியுள்ளன. எனவே புதிய மாணவர்களின் அனுமதி அடுத்த ஆண்டின் முதற் காலாண்டுக்குள் நிகழும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2011ல் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக் கழக அனுமதியைப் பெற்றுள்ள மாணவர்களின் காத்திருப்பு நீண்டு செல்வதால் வேலைவாய்ப்புக்களின்றி மேலும் நீண்டகாலம் தமது பிள்ளைகள் காத்திருக்க வேண்டுமென பெற்றோர் விசனம் தெரிவித்தனர்.

## கழிவு நீர்...

அடைகின்ற கழிவு நீர் சில நேரங்களில் வடிகான் முகப்பில் தேங்கி விடுகின்றது. இதனால் அத்தேங்கிய நீரினுள் புழுக்களும், குடம்பிகளும் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது. மழைகாலங்களில் இது இன்னும் மோசமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கான உரிய தீர்வை பெற்றுத்தருமாறு மக்கள் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.

## தூய யூதாததேயு...

5.00 மணிக்கு செபமாலையுடன் இடம் பெற்றது. இவ்வாலய திருவிழாவின் 3வது நாள் திருப்பலிகளை அருட்பணி ஜெயரஞ்சன் கூஞ்ஞ, அருட்பணி S.A பொன்சின், அருட்பணி றெகினோல்ட் அருட்பணி R.திருச்செல்வம், அரபேணி கெபட்ப்றி ஜோயல் ,அருட்பணி G. நிதிநாசன் மற்றும் ஆயரின் பிரதி நிதியான அருட்பணி C.நோயல் இம்மானுவேல் போன்ற அருட்பணியாளர் களால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் பட்டது. 2012.10.27 மாலை 5.30 மணிக்கு விவிலிய வழிபாடும் நற்கருணை ஆசீரும் திருச்சொரூபப் பவனியும் இடம் பெற்றது. 28.10.2012 காலை 7.00 மணிக்கு அருட்பணி T.கிங்ஸ்லி றொபட் அடிகள் தலைமையில் திருவிழாக் கூட்டுத் திருப்பலி இடம்பெற்றது. திருவிழா கூட்டுத் திருப்பலியன்று திருமுழுக்கு திருச்சடங்கு, உறுதிப் பூசுதல் திருச்சடங்கும் இடம் பெற்றது. திருவிழா கூட்டுத்திருப்பலியின் பின் தூய யூதாதேயுவை நாடி வந்த பக்தர் களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## தாக்கப்பட்டனர்....

படும் அறிக்கையின் அடிப்படையிலேயே மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

பின்னர் மற்றோர் சம்பவத்தில் இரண்டாம் வருடத் தமிழ் மாணவர்கள் சிலர் மேலும் தாக்குதலுக்குள்ளாகி யுள்ளனர்.

அத்தாக்குதலைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மாணவர்களால் மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளதாக உறுதிப்ப டுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வரை பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் யாவற்றையும் புறக்கணிப்பதாக இரண்டாம் வருடத் தமிழ் மாணவர்கள் தெரிவித்தனர்.

தற்போது இவ்விடயம் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குப் பாரப்படுத்த ப்பட்டுள்ளதைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு மலை வளாகத்திற்கு 06.11.2012ல் வருகை தரவிருப்பதாக தெரிய வருகின்றது.

## வாக்குறுதிகளை...

ரோதயம் ஆகிய பிரதேசங்கள் உள்ளடங்குகின்றன. இதில் ராஜவரோதயம் மற்றும் சுமேதகம ஆகிய பகுதிகளில் வீதிகள் புனரமைக்கப்பட்டு வடிகான்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில் மத்தியில் இருக்கும் பிரதேசமான கிருஸ்ணபுரம் மட்டும் கவனிப்பாரற்று நீரில் மிதப்பது குறித்து மக்கள் கவலை தெரிவித் துளனர்.

மேலும் நகரசபைத் தேர்தல் காலத்தில் தற்போதைய நகரசபை உறுப்பினர்களால் தமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப் படவில்லையென்றும் கிருஸ்ணபுரத்தில் ஒரு பகுதிக்கு மட்டும் வடிகான் அமைக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் எவ்வித பயனும் இல்லை என்றும் சிறிதளவு மழைக்கே தம் பிரதேசம் நீரில் முழ்குவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்தனர். அத்தோடு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் தமக்கான உரிய தீர்வை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

## மழை நீரால் பலர்....

பிரதேசங்களுக்குள்ளும் மழை நீர் தேங்கி குறித்த பிரதேச வீடுகளுக்குள் மழை நீர் புகுவதால் மக்கள் பெரிதும் சிரமத்துக்குள்ளாகி உள்ளனர்.

மேலும் கடந்த 27,28,29 ஆகிய திகதிகளில் பெரும்பாலான வீடுகளுக்குள் மழைநீர் புகுந்துள்ளமை யையும் அதனால் மக்கள் உறவினர் வீடுகளில் தஞ்சம் புகுந்தமையையும் அவதா னிக்க முடிந்தது. ஆனால் இவர்களுக்கான எவ்விதமான நிவாரணப் பணிகளும் இது வரை செய்து கொடுக்கப் படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

## குடை சாய்ந்தது...

அப் பேரூந்துக்குப் போதுமான இடத்தைக் கொடுக்கும் சிந்தனையுடன் தான் தனது லொறியை சற்று தெருவின் அந்த்திற்குச் செலுத்திய போதே தெருவிலிருந்து லொறி ' வழுக்கத் தொடங்கியதாகக் குறிப்பிட்டார்.

திருமலையில் நடந்துவரும் தெரு அபிவிருத்தி வேலைகளுக்குச் சிறு கற்களை ஏற்றிவரும் ஒப்பந்த லொறிக்கே இந் நிலை ஏற்பட்டது.

வியாபாரம் பெருக்க விளம்பரம் செய்யுங்கள். வர்ண விளம்பரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்

**களை கட்டியது ...**

இவ்வாறு சாக்குச் சந்தை களைகட்டத் தொடங்கியதெனினும் திருமலையின் முக்கிய வியாபாரங்களில் ஒன்றான மீன் வர்த்தகம் கடும் பின்னடைவை இம் மழை நாட்களில் சந்தித்துள்ளது.

அடைமழை பெய்துவரும் இந்நாட்களில் சூறாவளி அச்சத்தினால் மீனவர்களின் கடல் பயணம் தடுக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் மீன் விற்போர் எவருமின்றி மத்திய பொது மீன் சந்தை வெறிச்சோடிக் காணப்பட்டது. இதனால் அம் மீன் சந்தையுடன் இணைந்த இறைச்சிக் கடைகளுகம் ஆளரவமற்றுப் பூட்டிக் கிடந்தன.

ஆனால் நகரக் கடைகளில் இறைச்சிக் கோழிகளுக்கான கேள்வி அதிகரித்திருந்ததாக கோழி விற்பனை செய்யும் நகர வியாபாரி ஒருவர் தெரிவித்தார். திருமலையிலிருந்து கொழும்பிற்பான மீன் ஏற்றுமதியும் தடைப்பட்டிருந்தால் கொழும்புச் சந்தைகளில் மீன்களுக்கான விலை பல மடங்கு அதிகரித்திருந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் குறிப்பிடுகின்றன.

## மழையால் உடைந்தது...

வடிகான்கள் அமைக் கப்படாதால் பெருகிய மழை நீர் அமைக்கப்பட்ட கல் வீதி யால் ஓடுவதாகவும், இதனால் சில இடங்களில் போடப்பட்ட கற்கள் மேல் தள்ளி இருப்ப தாகவும், தெரிவிக்கப் படுகிறது. மேலும் இவ் ஒழுங்கை வீதி உயர்த்தப்பட்டமையால் மழை நீரானது வீடுகளுக்குள் தேங்குவதாகவும் நகரசபை உடனடியாக வடிகான் களையும் அமைத்துத் தர வேண்டு மென்றும் பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மேலும் உரிய வடிகான்கள் அமைக்கப்படாத நிலையிலும் வீட்டுக் கழிவு நீர்களை வெளியேற்றவென குழாய்கள் அமைப்பதற்கு ஒழுங்கை வீதியமைப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களுக்கு குழாய்களும், பணமும் கொடுத்தாகவும் வீதிக்குள் தாக்கப்பட்ட அக்குழாய்கள் கூட சரியான முறையில் பதிக்கப்படவில்லை என்றும் மக்கள் தெரிவித்திருந்தனர். அத்தோடு குறித்த ஒழுங்கை வீதியினைத் திருத்து வதற்கு நகரசபையால் நியமிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் தொடர்பாகவும் மக்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களை மலை முரசுக்கு தெரிவித்துள்ளனர்.

## கந்தளாய் குளம் ...

பட்டுள்ளதை அடுத்து அப்பகுதி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

கந்தளாய் குளத்தில் பலர் தற்போதும் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபடுவதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் நிமல் பண்டார தெரிவித்தார்.

அதனால் குறித்த பகுதிக்கு அதிக பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

திருமலையில் முதன் முறையாக
DHL
உங்கள், வெளிநாட்டிலுள்ள உறவினர்கள் நண்பர்களுக்கு விரைவாகவும் (ஐந்தே நாட்களுக்குள்) பாதுகாப்பாகவும் பொதிகளை (Parcel) அனுப்ப உங்களின் சிறந்த தெரிவு DHL முறையே!


தற்போது DHL மூலமாக
* உணவுப் பொருட்கள்
* உடைகள்
* பரிசுப் பொருட்கள்
* வாழ்த்து மடல்கள் மற்றும்
* முக்கிய ஆவணங்களை அனுப்பமுடியும்.
இதற்கு நீங்கள் நாடவேண்டியது.
SS DIGITAL'S
58, Vidyalayam Road, Trincomalee.
Hot Line: 026 2224933 / 0773663103
(சண்முக வித்தியாலயத்திற்கு முன்பாக.)
DHL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 04. 11. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.